# நம்மிடையே புதிய வார்த்தை

**2022 – 2023**

திருவருகை ~ கிறிஸ்து பிறப்புக் காலச் சிந்தனைக் கையேடு
(முதல் ஆண்டு)



# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1 | திருவருகை ~ கிறிஸ்து பிறப்புக் காலச் செய்தி |
| 2 | இந்தக் கையேட்டின் நோக்கம் |
| 2 | இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் முறை |
| 3 | குழு அமர்வின் வடிவம் |
| 4 | குழுச் சிந்தனைகளை மேம்படுத்துதல் |
| 5 | சிங்கை கத்தோலிக்க வானொலி |
| 7 | திருவருகைக்கால ஞாயிறுகள் (முதல் ஆண்டு) |
| 8 | திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு |
| 14 | திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு |
| 20 | திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு |
| 26 | திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறு |
| 33 | கிறிஸ்து பிறப்புக்கால ஞாயிறுகள் (முதல் ஆண்டு) |
| 34 | கிறிஸ்து பிறப்புப் பெருவிழா |
| 40 | மரியா, இறைவனின் தாய் பெருவிழா |
| 46 | ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா |
| 52 | பிற்சேர்க்கை ~ நடவடிக்கைகள் |
| 59 | நன்றியறிவிப்புகள் |

# திருவருகைக்கால, கிறிஸ்து பிறப்புக்காலச் செய்தி 2022 - 2023

கிறிஸ்துவில் பிரியமான சகோதரர் சகோதரிகளே,

நம் தந்தையின் அற்புதக் கொடையைப் பெற, நாம் நம் குடும்பத்தாரோடும் நண்பர்களோடும் கூடித் தயாரிக்க நல்லதொரு சந்தர்ப்பம் நமக்கு மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. நாம் எவ்வாறு ஆர்வமுள்ள இதயத்தோடு இறைவனின் கொடையைப் பெற எவ்வளவு திறந்த மனதோடு இருக்கிறோமோ அவ்வாறே தந்தை நம் மீது வைத்திருக்கும் அன்பின் ஆழத்தைக் கண்டறிய நாம் மேற்கொள்ளும் தயாரிப்பை இந்தக் கொடை வெளிப்படுத்துகிறது.

விவிலியம் என்பது நம் தந்தையாகிய இறைவனின் பிரசன்னத்தையும் அன்பின் மறை பொருளையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. எனவே, நம் தந்தையாகிய இறைவன் நம் மீது வைத்திருக்கும் இந்த அன்பைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்கான இந்தத் திருவருகைக்காலப் பயணத்தின் அடிப்படையாக அவருடைய வார்த்தையை நாம் எடுத்துக் கொள்கிறோம்.

திருவருகைக்காலத்தில் நமது பயணம் ஒருபோதும் புதியதாக இல்லாவிட்டால் கிறிஸ்து பிறப்பு விழா ஒருபோதும் ஒரே மாதிரியாக இருக்காது. இப்புதிய கொடை, கொடை அளிப்பவருடன் ஆழமான உறவில் நுழைவதற்கான அவரது அழைப்பிற்கு நாம் அளிக்கும் பதிலைப் பொறுத்தது. நம் தந்தையாகிய இறைவனுடன் உண்மையான அர்த்தமுள்ள உறவைப் பெறுவதற்கு நம்மைத் தடுப்பது எதுவும் இல்லை. நம் சார்பில், நாமும் நம் தந்தையிடமிருந்து எதையும் தடுத்தலாகாது.

எபிரேயருக்கு எழுதப்பட்டத் திருமுகத்தில் 'இறைவார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது. இரு பக்கமும் வெட்டக் கூடிய எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது' (எபி 4:12) என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. கொண்டாட்டத்தின் புதுமை நிகழ்வதற்கு, நமது தந்தையின் வார்த்தையை நாம் நமது அன்றாட வாழ்வில் வாழவும், அதை ஞானத்துடன் தெளிவுபடுத்தவும் நமக்குத் தைரியம் வேண்டும். அவரது கொடை வழியாக நம் தந்தையாகிய இறைவனின் அன்பின் முழுமையை உணரவும், நாம் வாழும் வாழ்விலிருந்து மனந்திரும்பவும் வார்த்தையின் விழிப்புணர்வு நமக்கு மிகவும் அவசியம்.

இந்தத் திருவருகைக்காலத்தில் நாம் இறைவார்த்தையை நோக்கி மீண்டும் திரும்புகிறோம். ஏனெனில் அந்த வார்த்தை இருண்ட பாதையிலுள்ள நம் அனைவருக்கும் ஒரு வெளிச்சம்.

நீங்கள் கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு நல்ல விதத்தில் தயாரிக்க எனது நல்வாழ்த்துக்கள்.

அருட்திரு. டெரென்ஸ் பெரெய்ரா
புதிய நற்செய்தி முழக்கத்திற்கான முதன்மை குரு

## இந்தக் கையேட்டின் நோக்கம்

இந்தக் கையேடு குடும்பங்களுக்காகவும், பெரியோர் கத்தோலிக்க மறைகல்விக் குழுக்களுக்காகவும், பங்கு நிறுவனங்களுக்காகவும், அன்பியச் சமூகங்களுக்காகவும் உத்தேசிக்கப்பட்டது. இதைத் தனி மனிதச் சிந்தனைகளுக்கும் பயன்படுத்தலாம்.

- நாம் வாழும் கிறிஸ்தவ சமூகத்தை, இறைவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை நம் வாழ்வில் கடைப்பிடிக்க ஊக்குவிக்கும் இடமாக மாற்றவும்,
- இதில் பங்கேற்போர், அண்டை வீட்டாருக்கும் தேவையுள்ளோருக்கும் உதவும் தங்களின் குறிக்கோளை அடையவும், சமூக அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும்,
- பங்கிலுள்ள நிறுவனங்களும் குழுக்களும் கிறிஸ்துவை மட்டுமே மையமாகக் கொண்டு, ஒன்று கூடி செபிக்கவும்,
- இதில் உள்ளச் சிந்தனைகள், செய்திகள், செயல்பாடுகள், நடவடிக்கைகள் மூலம் ஒருவரோடு ஒருவர் விசுவாசத்தைப் பகிர்ந்து, ஒப்புரவாக்கப்பட்டு, அன்பை மட்டுமே தகவல் பரிமாற்றத்தின் முக்கியச் செய்தியாக்கிக் குடும்பத்தினரிடையே உள்ள தொடர்பை அதிகரிக்கவும் இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

## இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் முறை

திருப்பலியில் இறைவார்த்தையைப் பெறுவதற்கான முன்தயாரிப்பாக ஞாயிறு திருப்பலிக்கு முன்னரோ, அல்லது திருப்பலியில் நாம் கேட்ட இறைவார்த்தைகளை நம் வாழ்க்கையில் பின்பற்றும் வகையில் ஞாயிறு திருப்பலிக்குப் பின்னரோ இதைப் பயன்படுத்தலாம்.

குழு அமர்வின் போது இறைவார்த்தையைப் படிக்கவும், அமர்வை வழிநடத்தவும், கையாளவும் அமர்வின் உறுப்பினர்கள் தாராளமாக முன்வரலாம்.

ஒவ்வொரு அமர்வையும் சிறப்புடன் வழிநடத்த வெவ்வேறு உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்கலாம். வேறொருவர் அமர்வில் நடைபெறும் செயல்களைக் குறிப்பெடுத்து, வர இயலாதவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ஒவ்வொரு அமர்வும் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளவும். அடுத்த அமர்விற்கான இடமும் நேரமும் இந்த அமர்வில் அறிவிக்கப்பட வேண்டும்.

# குழு அமர்வின் வடிவம்

## தொடக்கச் செபம்

எல்லோரும் ஒன்று சேர்ந்து தொடக்கச் செபத்தைச் சொல்லி, தொடக்கப் பாடலைப் பாடலாம். தியான உணர்வையும், இறைவார்த்தையைச் செவிமடுக்கத் தூண்டும் பாடல்களைப் பயன்படுத்தவும்.

## இறைவார்த்தை

கொடுக்கப்பட்டுள்ள மூன்று இறைவார்த்தைப் பகுதிகளை இரு முறையாவது வாசித்து, சில மணித்துளிகள் மௌனமாக தியானிக்கவும். பின்னர், இந்தக் கையேட்டில் உள்ளவற்றைப் பயன்படுத்தி அமர்வின் முதல்வர் அப்பகுதிகளுக்கு விளக்கம் தர வேண்டும். அமர்வின் முதல்வர் முன்னதாகவே தகுந்த தயாரிப்புடன் இருத்தல் அவசியம்.

## தியானிப்போம்

இந்த வார இறைவார்த்தைப் பகுதிகளைச் சரியாகப் புரிந்து கொள்ள, நமது சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் வாசித்துப் பின்னர் சிறிது நேரம் தியானிக்கவும்.

## சிந்திப்போம்

வெவ்வேறு குழுக்களை நினைவில் கொண்டு இந்தப் பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு உகந்தப் பகுதியை எடுத்து வாசித்து, சிந்தித்துக் கருத்தளிக்கவும். பலரும் கருத்தளிக்க நேரம் ஒதுக்கவும். ஒரே நபர் பேசுவதைத் தவிர்க்கவும்.

## நம் வாழ்விற்காக

இறைவார்த்தையின் அழைப்பை ஏற்றுக் குழுவாகவோ தனி நபராகவோ ஒரு திடமான செயலில் ஈடுபட உங்களுக்கான இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## நற்செயல் புரிவோம்

இயேசுவைப் பற்றிய நற்செய்தியை வேறொரு நபருடன் பகிர்ந்து கொள்ள நீங்கள் செயல்பட உதவும் இப்பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## நிறைவு செபம்

எல்லோரும் இணைந்து, நிறைவு செபத்தைச் சொல்லி இவ்வமர்வை நிறைவு செய்யவும். நம் சமூகத்துக்காகவும், பங்கேற்போருக்காகவும், அவர்களது குடும்பத்திற்காகவும் சிறப்பாகச் செபிக்கவும்.

## பிற்சேர்க்கை நடவடிக்கைகள்

நம் ஆன்மீகப் பயணத்தை நம் கிறிஸ்தவ சகோதரர் சகோதரிகளுடன் மேம்படுத்தச் செயல்பாடுகளும், நடவடிக்கைகளும் பிற்சேர்க்கைப் பகுதியில் உள்ளது.

# குழுச் சிந்தனைகளை மேம்படுத்துதல்

*‘இரண்டு, மூன்று பேர் என் பெயரால் எங்கே கூடியிருப்பார்களோ அங்கே அவர்கள் நடுவே நான் இருக்கிறேன்.’ (மத்தேயு 18:20)*

கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் குறித்து கவனமாய் இருங்கள். குழுவினிடையே பேசும் போதும், செயல்படும் போதும் பணிவுடனும் மரியாதையுடனும் இருங்கள். உரையை தியானத்துடன் வாசியுங்கள். நற்செய்தி வாசகங்களுக்கு உங்களது சிறந்த கவனத்தைக் கொடுங்கள்.

*‘எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தாய், நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல், அவர்களும் நம்முள் ஒன்றாய் இருக்கும்படி மன்றாடுகிறேன்.’ (யோவான் 17:21)*

அனைவரையும் உபசரியுங்கள். புதிய வருகையாளர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துங்கள். ஒவ்வொருவரையும் சமூகத்தின் அன்பிற்குரிய அங்கங்களாக நடத்துங்கள். அமர்வில் அனைவரும் பங்கேற்கும்படி ஊக்குவியுங்கள். அனைவருக்கும் புரியும்படியான சொற்களைப் பயன்படுத்துங்கள்.

*‘அவர்களுள் பெரியோர் அவர்கள் மீது அதிகாரம் செலுத்துகின்றனர். உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது.’ (மாற்கு 10:42-43)*

எப்போதும் யாரிடமும் அதிகாரத் தோரணையுடனும், அகந்தையுடனும், பிறருக்கு அறிவுரை கூறும் வகையிலும், யாவற்றையும் அறிந்த மாதிரி அல்லது என்ன செய்ய வேண்டுமென்று பிறருக்கு எடுத்துக்கூறும் வகையிலும், நடந்து கொள்ளக்கூடாது.

*‘என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.’ (லூக்கா 9:23)*

இந்தச் சிந்தனைகளுக்கு மிகவும் அடிப்படையானது இறைவார்த்தை, திருச்சபையின் போதனைகள் மற்றும் கிறிஸ்துவின்பால் நம்மை மனமாறச் செய்யும் அழைப்பு. இந்த அமர்வில், உங்கள் பகிர்வு வேறு கருத்து நோக்கித் திசைமாறிச் சென்றால், அன்றைய கருத்துக்கு ஆதரவு தரும்படி அழைக்கவும்.

*‘ஏனெனில் நீங்கள் பேசவேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்கு கற்றுத்தருவார்.’ (லூக்கா 12:12)*

பகிர்ந்து கூற வேண்டியதை முன் கூட்டியே தயாரிக்கவோ, இதற்காக ஒருவரை நியமிக்கவோ தேவையில்லை. இறைவனின் ஆவி இயல்பான கருணை மிகுந்த குணத்துடன் செயல்படுவதற்குக் காத்திருக்கவும். இக்கருத்து தொடர்பாக யாராவது தன்னிச்சையாகத் தங்களுடைய விசுவாச அனுபவத்தைப் பகிர வந்தால், அவருக்கு வாய்ப்பளித்து நன்றி கூறுங்கள்.

*‘உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்போது உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையை போற்றி புகழ்வார்கள்.’ (மத்தேயு 5:16)*

இச்சிந்தனைகள் இறைவனின் திருவுளத்தை செயல்படுத்தச் சவால் விடுகின்றன, நாம் சந்திக்கும் நபர்களிடம் இயேசுவின் அன்பைப் பற்றிச் சிந்திக்க அழைக்கின்றன. இதற்காக அடுத்த குழு அமர்வில் சிறிது நேரம் செலவழித்து, இதையே சென்ற வாரத்தில் நாம் எவ்வாறு சிந்தித்தோம் என்பதைப் பற்றி ஆராயவும்.

CatHOLIC·sg RADIO

## சிங்கை கத்தோலிக்க வானொலி

2022 - 2023 திருவருகை மற்றும் கிறிஸ்து பிறப்புக் காலச் சிந்தனைகள் கையேட்டின் ஒலி வடிவை வரும் நவம்பர் 23ம் தேதி முதல் ஒவ்வொரு புதன்கிழமையன்று காலை 8 மணிக்கு ஆங்கிலத்தில் எங்களது படைப்பாளர்கள் வழியாகக் கேட்டுப் பயன் பெறுங்கள்.

சிங்கை கத்தோலிக்க வானொலிச் செயலியை பதிவிறக்கம் செய்க. மேலும் எங்களது இணையப் பக்கம் (https://radio.catholic.sg) வழியாகவும் கேட்டு மகிழுங்கள்.

**Download the CatholicSG Radio app**

| Apple App Store | Google Play Store | Huawei App Gallery |
|---|---|---|

சிங்கை கத்தோலிக்க வானொலிச் செயலியில் இதே சிந்தனைகளை நீங்கள் எந்நேரத்திலும் கேட்டுப் பயன் பெறுங்கள்.

திருவருகைக்கால ஞாயிறுகள் (முதல் ஆண்டு)

# நம்மிடையே புதிய வார்த்தை



திருவருகைக்கால ஞாயிறுகள் [முதல் ஆண்டு]

# நம்மிடையே புதிய வார்த்தை

| வாரங்கள் | இறைவார்த்தை | கருப்பொருள் |
|---|---|---|
| திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு | எசாயா 2 : 1 - 5<br>உரோமையர் 13 : 11 - 14<br>மத்தேயு 24 : 37 - 44 | வார்த்தையின் மறைபொருளுக்கு விழிப்பாயிருத்தல் |
| திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு | எசாயா 11 : 1 - 10<br>உரோமையர் 15 : 4 - 9<br>மத்தேயு 3: 1 - 12 | வார்த்தைக்குச் செவிசாய்க்க மனந்திரும்புதல் |
| திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு | எசாயா 35 : 1 - 6, 10<br>யாக்கோபு 5 : 7 - 10<br>மத்தேயு 11: 2 - 11 | வார்த்தையை அறிந்திருத்தல் |
| திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறு | எசாயா 7 : 10 - 14<br>உரோமையர் 1 : 1 - 7<br>மத்தேயு 1: 18 - 24 | வார்த்தைக்குக் கீழ்ப்படிதல் |



திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு

# வார்த்தையின் மறைபொருளுக்கு விழிப்பாயிருத்தல்

## தொடக்கச் செபம்

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

ஆண்டவரே,

காத்திருந்து செபிக்கும் இந்தத் திருவருகைக்காலத்தில், எங்களது அன்றாட வாழ்வின் மத்தியில் உம்முடைய மறைபொருள்களை நீர் வெளிப்படுத்தும் தருணங்களில் நாங்கள் விழிப்பாக இருக்க உதவி புரிந்தருளும். எங்களது தயாரிப்பில் தினமும் 'கிறிஸ்துவை அணிந்து கொள்தல்' என்பதன் பொருள் என்ன என்பதை அறிவதற்கான உமது அழைப்பிற்கு நாங்கள் தகுந்த பதில் அளிக்க எங்கள் இதயத்தையும் மனதையும் புதுப்பித்து, எங்கள் வாழ்வில் உம்மைக் கொடையாகப் பெற நாங்கள் தயாராக இருக்க அருள்புரியும்.

ஆமென்.

## இறைவார்த்தை

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்துப் பின் அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

### முதல் வாசகம்

**எசாயா 2 : 1 - 5**

முதல் அதிகாரத்தில் 'புனித நகரத்தின்' ஊழல், அநீதி, கிளர்ச்சி பற்றிச் சொல்லப்பட்ட பின் இந்த நம்பிக்கையூட்டும் வாக்குறுதி வந்ததுள்ளது. நம்பிக்கையற்ற, சாத்தியமில்லாத பணியின் மத்தியில், ஆண்டவருடையப் புனித மலை, உண்மையில் ஒரு தாழ்வான மலையாக இருக்கும் சீயோன் மலை, ஆண்டவருடைய உயர்ந்த மலையாக மாறும் என்று நம்பிக்கை அளிக்கிறார். இறைவனின் வழிகளைக் கற்றுக்கொள்ள நாடுகள் மலையை நோக்கிப் பாய்ந்து வரும் என்னும் வியக்கத்தக்க அறிகுறி, எதிர்நோக்கிற்கான மற்றொரு அடையாளம். இந்த உறுதியான அடையாளங்கள், மீட்பையும் மறுசீரமைப்பையும் பற்றிய நம் தந்தையாகிய இறைவனின் வாக்குறுதி நிறைவேறும் என்பதைத் தெரிந்து கொள்ள நமக்கு உதவுகின்றன. அப்போது தான் இறைவனின் அமைதியான ஆட்சி நிலவும், வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும், ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடிக்க முடியும். இதுவே நம் நல்லிணக்கத்திற்கு ஒரு சான்று. எல்லாம் இருண்டதாகத் தோன்றினாலும், ஆண்டவர் நம்மைக் கைவிடுவதில்லை.

### இரண்டாம் வாசகம்

**உரோமையர் 13 : 11 – 14**

தூய பவுல், இறுதிக்காலம் எது என்பதை விழிப்பாக இருந்து அறிந்து கொள்ளத் தனது வாசகர்களையும் நம்மையும் நினைவூட்டுகிறார். நமக்கு மீட்பைப் பெற்றுத் தந்த கிறிஸ்து நிச்சயமாக மீண்டும் வருவார். எனவே, நாம் நமது பாதுகாப்பைக் கைவிட்டு, ஊனியல்பின் இச்சைகள் நம்மில் வேரூன்றி, நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த நாம் அனுமதிக்கக் கூடாது. கிறிஸ்து நம் வாழ்வில் நுழையும் போது, எல்லா இருளும் விலகும் என்பதைத் தூய பவுல் நினைவூட்டுகிறார். ஆகவே, நாம் நமது திருமுழுக்கில் கிறிஸ்துவை அணிந்து கொண்டதை நம் நினைவு கொணர்ந்து, ஒளியின் ஆட்சிக்குரியப் படைக்கலன்களை அணியும் நேரம் வந்துவிட்டது. எனவே, நாம் ஒளியின் மக்கள் என்ற அடையாளத்தை முழுமையாக ஏற்று, இறைவனுடன் சரியான நல்ல உறவில் வாழ வேண்டிய நேரம் இதுவே.

### நற்செய்தி வாசகம்

**மத்தேயு 13 : 11 – 14**

கவனமுடன் விழிப்பாயிருத்தல் என்ற செய்தி தெளிவாக உள்ளது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிச்சயம். ஆனால், அது எப்போது நடக்கும் என்று சொல்ல முடியாது. அவருடைய வருகையின் சரியான நேரம் நமக்குத் தெரியாததால், கிறிஸ்தவ வழியில் எப்போதும் நாம் விழிப்பாயிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நற்செய்தியாளர் நமக்குத் தெரிவிக்க விரும்புகிறார். ஆண்டவரின் வருகைக்கான அடையாளங்களைத் தேடுவதை விட்டுவிட்டு, உண்மையான வழியில் வாழ நாம் கவனம் செலுத்த வேண்டும். அறிகுறிகள் தோன்றும் போது செய்யத் தொடங்கினால் தான் ஆண்டவர் நம்மைக் கவனிப்பார் என்பது மடத்தனம். விழித்திருப்பதற்கான அழைப்பு ஒரு வாழ்க்கை முறை, நன்மைத்தனமுள்ள இறைவன் நம்மைத் தொடர்ந்து அணுகி வருவதற்காக நாம் அளிக்கும் பதில்.

## தியானிப்போம்:

இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

கவனமுடன் விழிப்பாயிருத்தல் என்ற இந்தச் செய்தியுடன் நாம் இத்திருவருகைக்காலத்தைத் தொடங்கியுள்ளோம். நமது கிறிஸ்தவ வாழ்வில் இது எப்படி சாத்தியமாகும்? நாம் செயல்படும் விதத்திலும், வழிபடுவதிலும், அன்றாட வாழ்வில் ஈடுபடுவதிலும் கவனமுடன் இருப்பதில் தான் இது சாத்தியம். நாம் தினமும், குடும்பத்தில், வேலையில், பள்ளியில், பொழுதுபோக்கில் மற்றவருக்குக் கிறிஸ்துவாக இருப்பதற்கான நமது மனச்சாட்சியை ஆராய்ந்து சரிசெய்து கொள்வதற்கான நேரம் இது. அப்படியிருந்தால் ஆண்டவர் வரும்போது, நிலைவாழ்வை அனுபவிக்க நாம் தயாரிப்புடன் இருப்பதை அவர் காண்பார்.

திருவருகைக்காலம், நிச்சயமாக நம் வாழ்வில் இறைவனும் தூய ஆவியாரும் வெளிப்படுத்தும் மறைபொருளுக்கு விழிப்பாயிருக்கும் தோரணையின் நினைவூட்டலாகச் செயல்படுகிறது. விழிப்பாயிருக்கும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க இக்காலத்தைப் பயன்படுத்துவது நிச்சயமாக நல்லது. ஆனால் நாம் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து இந்த வார்த்தையோடு இணைந்திருந்தால், ஆண்டவர் நமக்கு எவ்வளவு அதிகமாகச் செய்ய முடியும் என்பதை நினைத்துப் பாருங்கள். தினமும் பல விஷயங்கள் நம் கவனத்தை ஈர்க்கின்றன, வேலை இடத்தில் முதலாளியின் நிபந்தனைகள், சக தொழிலாளியின் வேலைக் கோரிக்கைகள், நமது குடும்ப உறுப்பினர்களுக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கும் முதியோருக்கும் தேவைப்படுவதில் கவனம், நாம் எதிர்கொள்ளும் சமூக மற்றும் பொருளாதார பிரச்சனைகள் எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இதற்கு எந்த முடிவும் இல்லை. இதற்கு மத்தியில், ‘கடவுள், மனிதரின் மீட்பு தொடர்பாக தன்னையும் தனது திருவுளத்தின் நிலையான முடிவுகளை வெளிப்படுத்தவும் தொடர்பு கொள்ளவும் வார்த்தையான இயேசுவைத் தேர்ந்தெடுத்தார்’ (Dei Verbum #6). எனவே, நம் கவனத்தை ஈர்க்கும் எல்லாவற்றுக்கும் மத்தியில் நாம் வார்த்தைக்கு விழிப்பாயிருக்க வேண்டும் என்பது உண்மை. நாம் விழிப்பாயிருக்க முடிந்தால், நம் வாழ்வை மாற்றியமைத்து அதைப் புதிதாக உருவாக்க முடியும். திருவருகைக்காலத்தில் இதை ஏனோ தானோ என்று செய்யாமல், நம் தந்தையாகிய இறைவனை நோக்கிய நம் வாழ்வை மாற்றும் செயலாக இருக்க வேண்டும். அப்படியானால் அது நிலைவாழ்வை நோக்கிய நம் பாதையைச் சீர்படுத்தும்.

## சிந்திப்போம்: பகிர்வுக்கானக் கேள்விகள்

இந்தப் பகுதி தனிநபர் மற்றும் குழுக்களுக்கானப் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் எனும் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுவினர் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால் பகிருங்கள்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியப் பகுதி எது? அதைச் சற்று சிந்தியுங்கள்.*

- உங்கள் வாழ்வில் நீங்கள் இறைவார்த்தையைக் கூர்ந்து கவனித்த வேளையை நினைவு கூருங்கள். அதன் வழியாக நீங்கள் கற்றப் பாடம் என்ன?
- இறைவார்த்தையைக் கூர்ந்து கவனிக்க நீங்கள் எந்த ஆன்மீக ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் குழுச் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கலாம்.*

### அன்பியங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- நமது சமூக வாழ்வில், இறைவார்த்தைக்கு நாம் எவ்வாறு விழிப்பாயிருந்திருக்கிறோம்?
- இந்த விழிப்புணர்வு நமது சமூகத்தின் ஒரு பகுதியாக எவ்வாறு மாறும்?

### ஆலயப் பணிக்குழுக்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- நமது ஆலயத்திலும் சமூகத்திலும் நமது பணியை வழிநடத்துவதில் இறைவார்த்தை எத்தகையப் பங்கைக் கொண்டுள்ளது?
- இறைவார்த்தையின் வழிநடத்துதலுக்கு விழிப்பாயிருக்கும் பழக்கத்தை நாம் எவ்வாறு உருவாக்கலாம்?

### குடும்பங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- கிறிஸ்து பிறப்பு விழாவின் புதிய அனுபவத்தைப் பெற இந்தத் திருவருகைக்காலப் பயணத்தில் நம் குடும்பத்தார் எதைக் குறித்து விழிப்பாயிருக்க வேண்டும்?
- நம் குடும்பத்தில் இறைவார்த்தை உயிருடன் செயலாற்ற நாம் என்ன செய்யலாம்? ஒரு குடும்பமாக இணைந்து செய்ய ஒரு செயலை முடிவு செய்யுங்கள்.

## நம் வாழ்விற்காக

*உறுதியான செயல்களால் பதில் அளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை ஒரு குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

நம் தந்தையாகிய இறைவனிடம் நெருங்கி வளர நான் இறைவார்த்தைக்கு விழிப்பாயிருக்கிறேன்.

## நற்செயல் புரிவோம்

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

இந்தத் திருவருகைக்காலத்தில் இறைவன் தொட வேண்டும் என்று நீங்கள் விரும்பும் ஐந்து நபர்களின் பெயர்களை ஒரு தாளில் எழுதி, அவர்களுக்காகச் செபிக்கவும்.

திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு

# வார்த்தையின் மறைபொருளுக்கு விழிப்பாயிருத்தல்

## நிறைவு செபம்

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

இயேசு ஆண்டவரே,

அருள் நிறைந்த இந்த நேரத்திற்காக உமக்கு நன்றி. உமது வருகைக்கு நாங்கள் எப்போதும் தயாராக இருக்க உமது ஆவியார் தரும் தூண்டுதலுக்குக் கீழ்ப்படிந்து செயலாற்ற எங்களுக்குத் தொடர்ந்து ஊக்கமளித்து உதவும்படி உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

# என் திருவருகைக்காலச் சிந்தனைக் குறிப்புகள்

திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

# வார்த்தைக்குச் செவிசாய்க்க மனந்திரும்புதல்

## தொடக்கச் செபம்

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

ஆண்டவராகிய இயேசுவே,

மீண்டும் எங்களை உமக்கு முன்பாகக் கூட்டிச் சேர்த்ததற்காக உம்மைப் போற்றிப் புகழ்ந்து, உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் இதயத்தையும் மனதையும் உமக்குத் திறக்கச் செய்தருளும். தூய ஆவியார் எங்களைச் சுற்றி செயலாற்றுவதை நாங்கள் கவனத்தில் கொண்டு, உமது அன்பின் பிரசன்னத்தை எங்களிடையே உணரச் செய்து, உமது வார்த்தையில் நிலைத்திருக்க நீர் எங்களுக்குத் தரும் மென்மையானத் தூண்டுதலுக்குச் செவிசாய்க்கக் கற்றுத் தாரும்.

ஆமென்.

## இறைவார்த்தை

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்துப் பின் அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

### முதல் வாசகம்
### எசாயா 11 : 1 - 10

தாவீதின் தலைமுறையைச் சார்ந்த ஒரு மீட்பு அளிக்கும் அரசனைப் பற்றி நாடுகடத்தலுக்குப் பின் எழுதப்பட்ட இந்த இறைவாக்குக் கவிதை எதிர்நோக்காலும் பல சாத்தியக்கூறுகளாலும் நிறைந்துள்ளது. இந்த அரசரால் தூய ஆவியாரின் முழுமையில், விலங்குகளை அடக்கி உலகில் அமைதியைக் கொண்டுவர முடியும். காட்டு விலங்குகளுக்கு நடுவிலும், அடக்கப்பட்டக் காட்டு விலங்குகளுக்கு நடுவிலும் ஒரு குழந்தையைத் தனியாக விடுவதற்கும் உள்ள வேறுபாடே இந்த அமைதிக்கான அறிகுறி. குழந்தைகள் மற்றும் கால்நடைகளின் பாதுகாப்பிற்காக அஞ்சும் அந்தக் காலநிலைக்கு இது ஒரு உறுதியளிக்கும் ஆச்சரியம். போரும் தொற்றும் கொந்தளிக்கும் இந்தக் காலநிலையில் இத்தகைய அமைதியை இன்றைய நவீனக் கற்பனை ஏற்காது. இருப்பினும், 'மண்ணுலகம் ஆண்டவரைப் பற்றிய அறிவால் நிறைந்து' (வச 9) படைப்பு அனைத்தும் முழுமையாகப் புதுப்பிக்கப்படும் என்ற ஏசாயாவின் வாக்குறுதி எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் தருகிறது.

### இரண்டாம் வாசகம்
### உரோமையர் 15 : 4 - 9

தூய பவுலின் காலத்தில் உரோமைப் பேராலயம் நம்பிக்கைக்கு பெயர் பெற்றது. இருப்பினும், அங்குள்ள யூதர்களுக்கும் பிற இனத்தாருக்கும் இடையே பதற்றம் இருந்தது. அவரது மறைப் பணிக்கு உதவ உரோமையர்களுக்கு எழுதிய குறிப்பிடத்தக்க இக்கடிதத்தில், தூய பவுல் இரு குழுக்களும் ஒரே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஆராதிப்பதால் ஒன்றித்திருக்க அறிவுறுத்துகிறார். ஆபிரகாமின் தந்தையாகிய இறைவனின் வாக்குறுதி மீது தான் கிறிஸ்தவம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது என நினைவூட்டுகிறார். விடாமுயற்சியால் அனைவரும் நம்பிக்கையோடு வாழவும், ஊக்குவிக்கப்படவும் விவிலியம் எழுதப்பட்டுள்ளது. அனைவரும் வணக்கத்தோடும் புகழ்ச்சியோடும் விருத்தசேதனம் செய்யப்பட்டோர் வழியாக நம் தந்தையாகிய இறைவனை மகிமைப்படுத்த அனைவரும் ஈர்க்கப்பட வேண்டும் என்று பவுல் உறுதிப்படுத்துகிறார்.

### நற்செய்தி வாசகம்
### மத்தேயு 3 : 1 - 12

மத்தேயு நற்செய்தியில் திருமுழுக்கு யோவானின் தோற்றம் சிறிது என்றாலும் அது பலரின் கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை. 'மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது' என, ஒட்டக முடி ஆடையணிந்து, மக்கள் மனந்திரும்பக் கூக்குரலிட்டது தனது பார்வையாளர்களை எழுப்பி, உட்கார வைத்துக் கேட்கச் செய்தது. ஆங்கிலத்தில் 'அரசு' என்ற வார்த்தை யோவானின் செய்தியை முழுமையாக விவரிக்கவில்லை என்றாலும், தெய்வீக அதிகாரம் கொண்ட வல்லமை அனைத்தையும் ஆட்சி செய்து, கற்பனை செய்ய முடியாத இந்த உண்மை, பலரை பாவ வழிகளிலிருந்து மனந்திருப்பி, தந்தையாகிய இறைவனின் முழுமைக்குள் நுழையத் தூண்டுதலை ஏற்படுத்தியது. பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களின் இதயங்கள் விண்ணரசின் முழுமையைத் தழுவவில்லை. நமது மனந்திரும்புதலின் செயல் அவர்களைப் போலில்லாமல் உண்மையிலேயே நமது நோக்கத்தைப் பிரதிபலிக்க வேண்டும்.

## தியானிப்போம்:

இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

உண்மையான அமைதி எப்படி இருக்கும் என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு விவரிக்கின்றன. இறைவன் அளிக்கும் இந்த உண்மையான அமைதிக்குத் தான் நாம் எல்லாரும் ஏங்குகிறோம். ஆனால், அது எப்போதும் நம் பிடியிலிருந்து நழுவிச் செல்கிறது. இதை எழுதும் நேரத்தில், நாடுகள் போரிலும், முட்டாள்தனமான கொலைகளிலும், மகிழ்ச்சியோடிருக்கும் ஒரு குழந்தை மறு கணம் மறைவது, என உலகம் குழப்பத்தில் உள்ளதாகத் தெரிகிறது. இது உண்மையில் சாத்தியமா? 'அமைதி' என்றால், சண்டை சச்சரவின்றி மக்கள் ஒன்றித்து வாழ்வது என நாம் நினைக்கிறோம். ஆயினும், உண்மையான அமைதியிலும் பதற்றம் உண்டு. அந்தப் பதற்றத்தில் நாம் என்ன செய்கிறோம்? ஓநாயும் ஆட்டுக்குட்டி, சிங்கமும் கன்றும், யூதர்களும் பிற இனத்தாரும், என்ற இணையைக் கேட்ட உடனே அதிலுள்ள அசௌகரியத்தை உணர முடிகிறது. நிச்சயமாக பதற்றம் இருந்தாலும், 'மறைநூல் தரும் மன உறுதியினாலும் ஊக்கத்தினாலும் நமக்கு எதிர்நோக்கு உண்டாகிறது' (உரோ 15:4). அதற்காக, நாம் நமது பழைய வழிகளில் மனந்திரும்ப வேண்டும்.

'மனந்திரும்புதல்' என்ற சொல், ஒருவரின் நடத்தைக்குப் புதிய ஆன்மீகப் பழக்கங்களையும் புதிய மனதையும் வளர்க்க நம்மில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துதல் எனப் பொருள்படும் 'repentir' என்றப் பழைய பிரெஞ்சு சொல்லிலிருந்து வருகிறது. நாம் மற்றவர்களோடு சரியான உறவிலிருக்க இன்னும் போராடிக்கொண்டிருப்பதால், கடவுளின் திட்டம் இப்போது நடக்க முடியாது என்ற இந்த உணர்தலை நாம் புறக்கணிக்க முடியாது. நமது சொந்த மன்னிக்க முடியாத தோரணைகளும், அக்கறையற்ற மனப்பான்மையும் இவ்வுலகில் பதற்றத்தையும் ஒழுங்கின்மையையும் தொடர அனுமதித்துள்ளன என்பதே நிதர்சனம்.

உலகில் நடக்கும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது, செபமும் அனுதாபமும் மட்டும் போதாது. என்ன செய்தோம், என்ன செய்யவில்லை என்று பார்க்க வேண்டிய அவசியம் நமக்கு உள்ளது. நம் வாழ்வில் வன்முறையையும் ஒழுங்கீனத்தையும் நிலைநிறுத்துவதற்காக இந்தத் தலைமுறையைத் தாக்க நம் தந்தையான கடவுளுக்கு முழு உரிமை உண்டு. இயேசு கிறிஸ்து இந்த உறவை சீர்படுத்த வந்தார், கடவுளையும் அடுத்திருப்போரையும் அன்பு செய்யக் கட்டளையிட்டார். ஆனாலும், வார்த்தையைக் கேட்டு அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்றக் கட்டளையை நாம் அடிக்கடி கவனிக்கத் தவறிவிடுகிறோம். எனவே தான், நாம் மனந்திரும்ப வேண்டிய அவசியம் உள்ளது. புதிய பழக்கவழக்கங்களை உருவாக்க நாம் நம் நடத்தையை சற்று மாற்றிக் கொள்ள வேண்டும். பிறரை மன்னிப்பவர்களாகவும், மக்களையும் அவர்களின் சூழ்நிலைகளிலும் அதிக அக்கறை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் மற்றவர்கள் மீது அக்கறை செலுத்த விரும்புவதால் அவர்களின் வாழ்வை மாற்றுவதில் ஈடுபட வேண்டிய அவசியம் உள்ளது. நம் 'மண்ணுலகம் ஆண்டவரைப் பற்றிய அறிவால் நிறைந்திருப்பதால்' (எசா 11:9) நாம் இவ்வாறு செய்வதால் நம்மால் உண்மையான அமைதியைக் காண முடியும்.

இந்தத் திருவருகைக்காலத்தில், கடவுளின் உண்மையான அமைதிக்காக நாம் என்ன செய்தோம், என்ன செய்யத் தவறிவிட்டோம் என்பதை நினைவில் கொள்வோம். இறை வார்த்தையாலும் தூய ஆவியாராலும் வழிநடத்தப்பட வார்த்தையுடனான நமது உறவை வளர்த்து, நாம் மனம் மாறி புதிய பழக்கவழக்கங்களை உருவாக்கிக் கொள்வோம்.

## சிந்திப்போம்: பகிர்வுக்கானக் கேள்விகள்

இந்தப் பகுதி தனிநபர் மற்றும் குழுக்களுக்கானப் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் எனும் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுவினர் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

### தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கான கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால் பகிருங்கள். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியப் பகுதி எது? அதைச் சற்று சிந்தியுங்கள்.*

- சில சூழ்நிலைகளில் உங்கள் அணுகுமுறையோ நடத்தையோ, ஒழுங்கின்மைக்கும் வன்முறைக்கும் பங்களித்த நேரங்களை நீங்கள் அறிவீர்களா?
- உங்கள் பதில் 'ஆம்' என்றால், அந்தக் கடின வேளைகளில் உங்கள் பதிலை மாற்ற என்ன செய்தீர்கள்? 'இல்லை' என்றால் நீங்கள் மேலும் விழிப்பாயிருக்க எது உதவியது?

### குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கான கேள்விகள்

*உங்கள் குழுச் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கலாம்.*

### அன்பியங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- கடவுளின் வார்த்தை நம் சமூகத்தின் இதயத்தில் உள்ளதா? வார்த்தையால் நாம் எவ்வாறு வழிநடத்தப்படுகிறோம்?
- மனந்திரும்புவதற்கும் புதுப்பிப்பதற்கும் கடவுளுடைய வார்த்தையை அனுமதிப்பது நம் சமூகத்தில் ஒரு பழக்கமா? இதைச் சிறப்பாக்க நாம் என்ன செய்ய முடியும்?

### ஆலயப் பணிக்குழுக்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- உங்கள் ஆலயப் பணியினுள் எங்கு மாற்றம் தேவை என நீங்கள் நினைக்கிறீர்கள்?
- இறை வார்த்தையில் அதிகக் கவனத்துடன் இருக்க நாம் என்ன செய்யலாம்?

### குடும்பங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- கடவுளுடனான உங்கள் உறவை மாற்றவும் புதுப்பிக்கவும் உங்களுக்கு உதவிய ஒரு வசனத்தை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் பகிர்ந்து கொள்ளும் வசனங்களை ஒரு புத்தகத்தில் எழுதுங்கள். குடும்பத்திற்கு முக்கியமான ஆன்மீக நூல்களைத் தொடர்ந்து சேகரிக்கவும். நம்பிக்கையில் வளரவும் ஒருவருக்கொருவர் நினைவூட்டவும் இந்தப் புத்தகத்தைப் பயன்படுத்தவும்.

### நம் வாழ்விற்காக

*உறுதியான செயல்களால் பதில் அளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை ஒரு குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

என் நடத்தை கடவுளின் உண்மையான அமைதிக்கு சீர்குலைவையோ பிரிவையோ உண்டாக்க முடியும். அதை மாற்றிச் சீரமைக்க என்னால் முடியும். இவ்வாறாக, புதிய ஆன்மீக பழக்க வழக்கங்களை உருவாக்கலாம். அது வார்த்தையைக் கேட்பதில் தான் தொடங்குகிறது.

### நற்செயல் புரிவோம்

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

கிறிஸ்துவை மையமாகக் கொள்வதில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களையும், கிறிஸ்துவின் சீடருக்கு இருக்க வேண்டிய குணங்களையும் பட்டியலிடுங்கள்.

திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

# வார்த்தைக்குச் செவிசாய்க்க மனந்திரும்புதல்

நிறைவு செபம்

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

அன்புத் தந்தையே இறைவா,

நாங்கள் உம் முன் வந்து, அமைதியில் நிலைத்திருந்து, இந்த உலகு அனைத்திற்கும் நீரே கடவுள் என்பதை ஏற்றுக் கொள்ள விரும்புகிறோம். நாங்கள் அனைவரும் உம்மோடும் படைப்புகள் அனைத்தோடும் உமது நிலையான மகிழ்ச்சியில் பங்குகொள்ளும் வரை எங்களோடு இருப்பீர் என நீர் வாக்களித்தீர். உமது முழுமையான அமைதியிலும் மகிழ்ச்சியிலும் வர எங்களைப் புதுப்பித்துக் கொள்வதற்காக உமது வாக்குறுதியைக் கடைப்பிடிக்க எங்களை ஊக்குவித்தருளும்.

ஆமென்.

# என் திருவருகைக்காலச் சிந்தனைக் குறிப்புகள்

திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

# வார்த்தையை அறிந்திருத்தல்

## தொடக்கச் செபம்

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

விண்ணகத் தந்தையே இறைவா,

இயேசு கிறிஸ்து என்னும் கொடைக்காகவும், எங்கள் வாழ்வுக்காகவும், எங்கள் மீட்புக்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இத்திருவருகைக்காலத்தினுள் நாங்கள் ஆழமாகச் செல்லும்போது, மனித வரலாற்றில் உமது திருமகனின் வருகையைச் சுட்டிக்காட்ட உதவும் விவிலியத்திலுள்ள உயிரளிக்கும் உமது வார்த்தையை மேலும் அறிந்து கொள்ள எங்களுக்கு உதவியருளும். இன்று நாங்கள் எதிர்கொள்ளும் எல்லாவற்றிலும் மகிழ்ச்சியையும் பொறுமையையும் கடைப்பிடிக்க உமது அறிவுரையை இன்று உமது வார்த்தையில் காண எங்களுக்கு உதவியருளும். எங்கள் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளால் மீட்பரின் பிரசன்னத்தை அடையாளம் காணவும் எங்களுக்கு உதவியருளும்.

ஆமென்.

## இறைவார்த்தை

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்துப் பின் அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

### முதல் வாசகம்
**எசாயா 35 : 1 - 6a, 10**

திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறை அக்களிப்பின் ஞாயிறு என்று அழைக்கிறோம். இன்றைய வாசகங்களிலும் மகிழ்ச்சி, நம்பிக்கை, ஊக்கம் ஆகியவை நிறைந்துள்ளது. முதல் வாசகத்தில், அசீரியாவில் (கிமு 722) நாடுகடத்தப்பட்ட இஸ்ரயேலருக்கு மகிழ்ச்சியூட்டும் செய்தியை வழங்கி, நம் தந்தையாகிய இறைவன் அவர்களைத் தங்கள் தாயகத்திற்குக் கூட்டிச் செல்லும் நேரத்தை அவர்களுக்கு உணர்த்துகிறது. 'பாலைநிலமும் பாழ்வெளியும் பூத்துக் குலுங்கும், தளர்ந்து போன கைகளும் கால்களும் திடமடையும்' என்ற விளக்கத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. இறைவன் தரும் விடுதலை மிகவும் வல்லமை மிக்கது. முடவர்கள் நடப்பது மட்டுமின்றி, 'மான் போல துள்ளிக் குதிப்பர், வாய்பேசாதோர் பாடுவர்' என எசாயா இறைவாக்குரைக்கிறார். இது, விடுவிக்கப்பட்ட இஸ்ரயேலர் தங்கள் தாயகத்தினுள் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டு நுழைவதன் உச்சத்திற்கு எடுத்துச் செல்கிறது.

### இரண்டாம் வாசகம்
**யாக்கோபு 5 : 7 – 10**

முதல் வாசகத்தைப் போலவே இரண்டாம் வாசகமும் இம்முறை, துன்புறுத்தலை எதிர்கொண்டு பாரோசியா என்னும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஏங்கிக் காத்துக்கொண்டிருந்தத் தொடக்கக்காலக் கிறிஸ்தவர்களுக்கு ஊக்கமூட்டும் செய்தியை வெளிப்படுத்துகிறது. தொடக்கக் காலக் கிறிஸ்தவர்கள் தங்களின் பொறுமையின் அவசியத்தை அறிந்து கொள்ள ஆசிரியர் இங்கு, ஒரு பயிரிடுபவர் தனது விளைச்சலுக்காக முன்மாரியும் பின்மாரியும் பெய்யுமளவுக்குப் பொறுமையாகக் காத்திருப்பது என்ற ஒரு வல்லமையான உருவகத்தைப் பயன்படுத்தி, தொடக்கக்காலக் கிறிஸ்தவர்களும் அண்மையிலுள்ள ஆண்டவருடைய வருகைக்காகக் காத்திருக்க வேண்டும் என தெரிவிக்கிறார். மேலும், தனக்கு முன் இருந்த இறைவாக்கினர்களும் துன்பங்களை எதிர்கொண்ட போது பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது என யாக்கோபு அவர்களின் கவனத்தை ஈர்க்கிறார்.

### நற்செய்தி வாசகம்
**மத்தேயு 11 : 2 – 11**

இறை வார்த்தையைப் பற்றி மக்கள் அதிகம் தெரிந்து கொள்ள இயேசு உதவுவதையும், அது இப்போது எப்படி நிறைவேறுகிறது என்பதையும் இன்றைய நற்செய்தி காட்டுகிறது. இயேசு தான் மெசியாவா என்ற திருமுழுக்கு யோவானின் கேள்விக்கு, முதல் வாசகத்தில் உள்ள எசாயாவின் இறைவாக்குகளில் நம் தந்தையாகிய இறைவன் தம் மக்களை எப்படி மீட்பார் என்பதற்கான அறிகுறிகளை இயேசு குறிப்பிட்டு, அது இப்போது எவ்வாறு நிறைவேறுகிறது என்ற அவரது பணியைக் குறிப்பிடுகிறார். 'பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர், கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர், காது கேளாதோர் கேட்கின்றனர்' ஆகியவையே இதன் அறிகுறிகள். யோவானைப் பற்றி மக்களிடம் பேசுகையில், 'மெசியாவுக்காக வழியை ஆயத்தம் செய்ய வந்தத் தூதன்' (மலாக்கி 3:1) எனவும் இயேசு அவர்களிடம் குறிப்பிடுகிறார்.

## தியானிப்போம்:

இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

மனிதக்குலத்தை மீட்க நம் தந்தையாகிய இறைவன் அளித்த வாக்குறுதி இன்றைய மூன்று வாசகங்கள் வழியாகவும் ஊடுருவி உள்ளது. மீட்பைப் பற்றிய இறைவனின் வாக்குறுதி எவ்வாறு பழைய ஏற்பாட்டு முதல் புதிய ஏற்பாடு வரை உருவாகி, இறுதியில் கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் அறிய இப்பகுதிகள் நமக்கு உதவுகின்றன.

முதல் வாசகத்தில், நாடுகடத்தலால் வாடும் இஸ்ரயேலர்களுக்கு எசாயா ஒரு நம்பிக்கையூட்டும் வெளிப்பாட்டை அளிக்கிறார். நம் தந்தையாகிய இறைவன் எவ்வாறு அவர்களைச் சிறையிலிருந்து விடுவிப்பார் என்றும் அவர்களுக்குக் கூறுகிறார். இது ஒரு முக்கியமான அதிச நிகழ்வாக இருக்கும் என்பதை இயற்கை 'மகிழ்ந்து பூக்கும், நோயுற்றோர் குணமடைவர், கடவுளின் மக்கள் நிலையான மகிழ்ச்சியில் தங்கள் தாயகத்தில் மீண்டும் நுழைவார்கள்' என்று இறைவாக்குரைக்கிறார்.

உடல் நீதியாக நாடுகடத்தலிலிருந்து அனைவரும் விடுவிக்கப்பட்ட எசாயாவின் இறைவாக்கை, இறைவனின் மீட்புத் திட்டத்தால் நாம் அனைவரும் எவ்வாறு ஆன்மீக ரீதியாக மீட்கப் படுவோம் என்பதை இயேசு இன்றைய நற்செய்தியில் விரிவுபடுத்துகிறார். அவரே வாக்களிக்கப் பட்ட மெசியா என்பதை அறிய விரும்பிய திருமுழுக்கு யோவானுக்கு அவர் அளித்த பதில் சொல்கிறது. 'பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர், கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர், காது கேளாதோர் கேட்கின்றனர்' என்று எசாயா சொன்ன அடையாளங்கள் இயேசு வழியாக நிறைவேறுவதைச் சுட்டிக் காட்டுகிறார். பழைய ஏற்பாட்டில் ஏற்கனவே எசாயா வழியாக இறைவாக்குரைக்கப்பட்ட மனிதக்குலத்திற்கான இறைவனின் மீட்புத் திட்டம் நிறைவேறுகிறது என்பதை இயேசு தான் செய்த அருள் அடையாளங்களால் சான்று பகர்கிறார்.

இரண்டாம் வாசகமும் இதே புரிதலை மேலும் மேம்படுத்துகிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு துன்புறுத்தலை எதிர்கொண்டத் தொடக்கக்கால கிறிஸ்தவர்கள் இப்போது இயேசுவின் இரண்டாம் வருகையை அனுபவிக்கும் நம்பிக்கையில் இருந்தனர். விண்ணக வெகுமதியை அனுபவிக்க முடியும் என்று எதிர்பார்த்த அவர்களைப் பொறுத்தவரை, இதுவே நம் தந்தையாகிய இறைவனின் மீட்புத் திட்டத்தின் இறுதி நிறைவேற்றமாக இருக்கும் என்ற நம்பிக்கை.

இவ்வாறாக, இன்றைய மூன்று வாசகங்களும் நமக்கு நம் தந்தையாகிய இறைவனின் வார்த்தையைப் பற்றிய அதிக விழிப்புணர்வையும், பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரை உள்ள மீட்புத் திட்டத்தின் வாக்குறுதியை அறியவும் உதவுகின்றன. பழைய ஏற்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்ட இறைவனின் மீட்புத் திட்டம் இவ்வுலகில் இயேசு செய்த பணிகளால் நிறைவேற்றப்பட்டுள்ளதையும் இவ்வாசகங்கள் தெளிவுபடுத்துகின்றன. இறுதியில், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் மீட்கப்பட்டவர்கள் அவருடன் நிலையான வாழ்வில் நுழையும் போது தான் இந்த மீட்பு நிறைவேறும்.

## சிந்திப்போம்: பகிர்வுக்கானக் கேள்விகள்

இந்தப் பகுதி தனிநபர் மற்றும் குழுக்களுக்கானப் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் எனும் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுவினர் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கான கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால் பகிருங்கள்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியப் பகுதி எது? அதைச் சற்று சிந்தியுங்கள்.*

- கடவுளுடைய வார்த்தையை நீங்கள் எந்த அளவில் அறிந்திருக்கிறீர்கள்? இந்த விழிப்புணர்வு எவ்வாறு இறைவனுடன் நெருங்கி நடக்க உங்களை வழிநடத்தியது?
- கடவுளின் மீட்புத் திட்டம் உங்கள் வாழ்வில் எவ்வாறு செயலாற்றுகிறது?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கான கேள்விகள்

*உங்கள் குழுச் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கலாம்.*

### அன்பியங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- சமூகத்தில் ஒருவரையொருவர் குறை கூறுவதைத் தவிர்க்குமாறு கிறிஸ்தவர்களுக்கு இரண்டாவது வாசகம் அறிவுறுத்துகிறது. நம் குழுவில் ஒருவருடன் ஒருவர் எப்படி அதிக பொறுமையைக் கடைப்பிடிக்கலாம்?
- இறை வார்த்தை வழியாக நமது வேறுபாடுகளை நாம் எவ்வாறு தீர்க்கலாம்?

### ஆலயப் பணிக்குழுக்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- மற்றவர்களுக்குப் பணியாற்றும் நாம், அவர்களுக்கு எத்தனை முறை கடவுளுடைய வார்த்தையை வழங்கியுள்ளோம்?
- மற்றவர்களுக்கு நம்பிக்கையூட்ட ஒரு ஆலயப் பணியாளனாக நாம் நமது ஆன்மீகத்தை எவ்வாறு ஆழப்படுத்தலாம்?

### குடும்பங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- உங்கள் குடும்பத்தில் நீங்கள் ஒருவரோடொருவர் உறவாடுகையில் எந்த இறை வார்த்தைகள் மிகவும் உயிர்ப்புடன் இருக்கின்றன?
- இந்தத் திருவருகைக்காலத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவுக்காக நீங்கள் ஒரே குடும்பமாக எவ்வாறு தயாரிக்கிறீர்கள்?

## நம் வாழ்விற்காக

*உறுதியான செயல்களால் பதில் அளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை ஒரு குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

அன்பாகவும் கனிவாகவும் இருந்து, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு நம்பிக்கை அளிப்பதால் எங்கும் எப்போதும் இறை ஆட்சியை கொண்டு வர நாம் உதவலாம்.

## நற்செயல் புரிவோம்

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

கடந்த வாரம் நீங்கள் பட்டியலிட்ட சவால்களை எதிர்கொள்ளும் இறைவார்த்தைகளைக் கண்டுபிடியுங்கள். சீடருக்குறிய குணங்களைக் கண்டறிய லூக்கா நற்செய்தியை வாசியுங்கள்.

திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

# வார்த்தையை அறிந்திருத்தல்

## நிறைவு செபம்

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத் தந்தையே,

எங்களிடையே என்றும் புதிதாக இருக்கும் உமது வார்த்தைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் மீட்பு இன்று எங்களோடு இருந்தாலும், அது முழுமையாக நிறைவேறவில்லை என்பதை நாங்கள் உணர உதவியருளும். கிறிஸ்துவின் மகிழ்ச்சி, நம்பிக்கை, அன்பு, ஊக்கம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் உமது அழைப்பை இன்றைய வாசகங்கள் வழியாக நாங்கள் அறிந்தோம். எங்கள் சொல்லாலும் செயலாலும் உமது ஆட்சியின் வருகைக்குத் தயாராக இருக்க எங்கள் பங்கை நாங்கள் செய்ய எங்களுக்கு உதவியருளும். உமது மகனின் பிறப்பைக் கொண்டாட நாங்கள் தயாராகும் இந்தத் திருவருகைக்காலத்தில் எங்களை உம்மோடு நெருக்கமாக வைத்துக் கொள்ளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

# என் திருவருகைக்காலச் சிந்தனைக் குறிப்புகள்

திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறு

# வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்

## தொடக்கச் செபம்

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

விண்ணகத் தந்தையே,

வாக்களிக்கப்பட்ட உமது திருமகனின் பிறப்புக்காக நாங்கள் மகிழ்ச்சியுடன் காத்திருக்கும்போது, இந்த அமர்வுக்காகவும், இந்த செப வேளைக்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது வார்த்தைகளை நாங்கள் கேட்கும் போது உமது தூண்டுதல்களைப் பின்பற்றி எங்கள் மனதைத் திறக்க உதவியருளும். நாங்கள் உம் மீதுள்ள நம்பிக்கையில் திடப்படவும், உமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவும் எங்கள் ஆன்மாவைத் தூண்டியருளும். மரியாவின் கீழ்ப்படிதலால் அவரது வயிற்றில் இயேசு கருவுற்றது போல, எங்கள் கீழ்ப்படிதலால் அவர் நம் இதயங்களில் குடி கொள்வாராக.

ஆமென்.

## இறைவார்த்தை

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்துப் பின் அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

### முதல் வாசகம்
**எசாயா 7 : 10 - 14**

எருசலேமின் அரசரான ஆகாசு ஒருவிதக் கட்டுக்குள் இருந்தார். அவரது எதிரிகள் அவருக்கு எதிராகக் கூட்டணி சேர்ந்தனர், தோல்வி உறுதியானது. நம் தந்தையாகிய இறைவன் அவரைக் கைவிடவில்லை, அவருக்கு உறுதியளிக்க எசாயாவை அனுப்பினார். இருப்பினும், கடவுளிடம் ஒரு அடையாளத்தைக் கேட்க எசாயா அவருக்கு வாய்ப்பளித்தபோது, ஆகாசு தன்னைத் தாழ்த்தி, கடவுளைச் சோதிக்க மாட்டேன் என்று சொன்னாலும், கடவுளால் எருசலேமைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை அவருக்கில்லை. கடவுளுடைய வார்த்தை ஒரு மனித அரசனால் விரக்தியடையக் கூடாது. எசாயா தனது மக்களுக்கு கடவுளின் பிரசன்னத்தின் அடையாளமாக, ‘கடவுள் நம்மோடு’ எனப் பொருள்படும் ‘இம்மானுவேல்’ எனும் பெயருடைய ஒரு குழந்தையின் பிறப்பை இறைவாக்காக உரைத்தார்.

### இரண்டாம் வாசகம்
**உரோமையர் 1 : 1 – 7**

தூய பவுல் தன்னை அறிமுகப்படுத்தி, உரோமைத் திருஅவைக்கு ஒரு கடிதத்தை எழுதினார். அவர் நற்செய்திக்கு அர்ப்பணித்த ஒருவராகத் தன்னை அடையாளப்படுத்தினார். இது முற்றிலும் அறியப்படாத ஒன்றல்ல. ஆனால் நீண்ட காலத்திற்கு முன்பே இறைவாக்கினர்களால் வாக்களிக்கப்பட்டது. இயேசுவில் நம்பிக்கை உருவாக்குவதற்கான அழைப்பை அவர் அறிவித்ததால், இயேசுவை நம்பவும், அவரைப் பின்பற்றவும், தனக்குச் செவிகொடுப்போரைத் திறம்பட அழைத்தார். இயேசுவுக்கும் தாவீதின் குடும்பத்துக்கும் இடையே உள்ள தொடர்பை தூய பவுல் உரோமையர்களுக்கு நினைவுபடுத்தினார். முன்பு பார்த்தது போல ஆகாசுக்கு நம் தந்தையாகிய இறைவன் மீது நம்பிக்கை இல்லை. மாறாக, இயேசு, நம் தந்தையாகிய இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்திருந்தார். தம் தந்தையின் விருப்பத்திற்கு சரணடைவதன் மூலம், இயேசு உயிர்த்தெழுந்து, அனைவருக்கும் இறைவனின் திருமகனாக அறிவிக்கப்பட்டார்.

### நற்செய்தி வாசகம்
**மத்தேயு 1 : 18 – 24**

தனக்கு நிச்சயிக்கப்பட்டப் பெண் கருவுற்றிருப்பதை அறிந்த யோசேப்பு ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும். அவர் விளக்கம் கேட்டிருக்கலாம். நிச்சயிக்கப்பட்டப் பெண் கருவுற்றிருந்தால் கல்லெறிந்து கொல்லப்படலாம் என இணைச்சட்டம் 22:20-21 கூறுகிறது. இருப்பினும், யோசேப்பு அமைதியாக மரியாவை விவாகரத்து செய்ய முடிவு செய்தார். மரியாவுக்கும் அவருடையக் குழந்தைக்கும் அந்தச் சமுதாயத்தில் ஒரு சரியான ஆண் பாதுகாவலர் இல்லை என்றால், நம் தந்தையாகிய இறைவன் திட்டம் நிறைவேறாது. எனவே, ஒரு வானதூதர் யோசேப்பின் கனவில் தோன்றி மரியாவை அவரது மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தினார். இந்த நிகழ்வும் யோசேப்பிற்கு பயத்தை உருவாக்கியிருக்கலாம். இருப்பினும், ஆகாசைப் போலன்றி, அவருக்கு நம்பிக்கை இருந்தது. மேலும், அவர் சொன்னபடியே செய்தார். எனவே, நம் ஆண்டவரின் வளர்ப்புத் தந்தையாக யோசேப்பை இன்று வரை நினைவு கூருகிறோம்.

## தியானிப்போம்:

இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

மூன்று வெவ்வேறு நபர்களையும் அவர்கள் கடவுளுக்கு எவ்வாறு பதிலளித்தார்கள் என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க இன்றைய வாசகங்கள் நம்மை அழைக்கின்றன. முதல் வாசகத்தில், எருசலேம் சிக்கலில் இருந்தது என்று கூறப்படுகிறது. மேலும், அரசரான ஆகாசு நம் தந்தையாகிய இறைவனின் வல்லமையில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஆயினும், கடவுள் தம் மக்களைக் கைவிடவில்லை. எசாயா வழியாக ஒரு அடையாளத்தைக் கொடுத்தார். நற்செய்தியில், யோசேப்பு எப்படி ஒரு கடினமானச் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார் என்றும் காண்கிறோம். அவருக்கு நிச்சயம் செய்யப்பட்ட மரியா வேறொருவரின் குழந்தையைப் பெற்றெடுத்தார். பண்டைய காலத்தில், ஒருவர் தனது சொத்துக்களை தன் மகன்களுக்குத் தர வேண்டும். முதல் வாரிசு அதிக பங்குக்குத் தகுதியானவர். அது யார் என்பதை சமூகத்திற்கு நிரூபிக்க இன்றைய நவீனச் சோதனை எதுவும் அன்று இல்லை. இவ்வாறு, மரியாவை மனைவியாகக் கொள்ள உண்மையான விளைவுகள் இருந்தன. ஆனாலும், அவர் கனவில் தோன்றிய வானதூதரின் கட்டளையை வெறும் கனவு என்று நிராகரிக்காமல், அதற்குக் கீழ்ப்படிந்தார். இறுதியாக, இரண்டாம் வாசகத்தில், தூய பவுல் இயேசுவைப் பின்தொடர்வதில் சற்று தடுமாறியதைக் காண்கிறோம் (கலா 1:11-24). இருப்பினும், இறுதியில், அவர் தனது வாழ்வை நற்செய்திக்காக முழுமையாக அர்ப்பணிக்கத் தன்னை ஒப்புக்கொடுத்தார்.

இந்நபர்களைப் பற்றி நாம் சிந்திக்கும் வேளையில், நாம் எவ்வாறு கடவுளுக்குப் பதிலளித்தோம் என்பதைப் பற்றி சற்று நினைவு கூறுவோம். நாம் இயேசுவில் நம்பிக்கை வைத்து அவரைப் பின்பற்றுவதைத் தெரிவு செய்வோமா? மேலும், ஒவ்வொரு வாசகமும் நாம் சிந்திக்க வெவ்வேறு சூழ்நிலைகளை நமக்குத் தருகிறது. முதல் வாசகம் ஆபத்துக்கு மத்தியில் நம்பிக்கை பற்றியும், நற்செய்தி நிச்சயமற்ற காலத்தில் நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல் பற்றியும், இரண்டாம் வாசகம் நமது நம்பிக்கையும் அடையாளமும் எவ்வாறு இணைக்கப்படலாம் என்பதைப் பற்றியும் சிந்திக்க நமக்கு அழைப்பு விடுக்கிறது.

இயேசுவைப் பின்தொடர்வதில் நம்பிக்கை வைத்து நமது சந்தேகங்களைப் போக்கவும் இன்றைய வாசகங்கள் நம்மை ஊக்குவிக்கின்றன. நம் தந்தையாகிய இறைவன் தமது திட்டத்தைப் படிப்படியாக நமக்கு வெளிப்படுத்தினார். நமது மீட்பின் வரலாறு இன்றும் தொடர்கிறது. நம் தந்தையாகிய இறைவனுக்குக் கீழ்ப்படிவதில் இயேசுவின் பணி இன்னும் நிறைவு பெறவில்லை. இன்றும், அது அவருடைய உடலான நம்மிலும் நமது திருஅவையிலும் தொடர்கிறது.

## சிந்திப்போம்: பகிர்வுக்கானக் கேள்விகள்

இந்தப் பகுதி தனிநபர் மற்றும் குழுக்களுக்கானப் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் எனும் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுவினர் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கான கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால் பகிருங்கள். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது? உங்கள் உள்ளத்தைத் தூண்டியப் பகுதி எது? அதைச் சற்று சிந்தியுங்கள்.*

- கடைசியாக நான் ஒரு சவாலானச் சூழ்நிலையில் இருந்தபோது நான் எப்படி பதிலளித்தேன்? அந்தச் சூழ்நிலையில் நான் கடவுளுடைய வார்த்தையைப் பயன்படுத்தினேனா?
- வாசகங்கள் என்னை எப்போதும் இறை நம்பிக்கையோடிருக்க அழைக்கின்றன. இறை வார்த்தை என் வாழ்வை வழிநடத்தும் வகையில் விவிலியம் வாசிப்பதிலும், அதை என் நினைவில் வைப்பதிலும் நான் எதிர்கொள்ளும் தடைகள் என்ன?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கான கேள்விகள்

*உங்கள் குழுச் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கலாம்.*

### அன்பியங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- ஒரு சமூகமாக நாம் சந்திக்கும் சில சவால்கள் என்னென்ன? நமது சமூகத்தில் உள்ள பிரச்சினைகளையும் சவால்களையும் தீர்க்க இறை வார்த்தையைப் பயன்படுத்துகிறோமா?
- இறைவார்த்தை தெரியாவிட்டால் நாம் எப்படி இயேசுவுக்கு நம்மை அர்ப்பணிப்போம்?

### ஆலயப் பணிக்குழுக்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- ஆலயப்பணியில் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில் நாம் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை? வாசகங்களும் அதன் கருவும் இச்சவால்களின் மீது சற்று ஒளி வீசுகிறதா?
- இந்த ஆலயப்பணியில் வார்த்தையினால் மற்றவர்களிடம் ஆழமான நம்பிக்கையைக் கொண்டு வர என்ன செய்யலாம்?

### குடும்பங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள். நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- நம் குடும்பத்தில் நாம் சந்திக்கும் சில சவால்கள் என்ன? அதைப் பற்றி வாசகங்களும் அதன் கருப்பொருளும் என்ன கூறுகின்றன?
- வார்த்தையை வாழ்வாக்க நாம் எவ்வாறு ஒருவருக்கொருவர் ஊக்கமூட்ட முடியும்?

## நம் வாழ்விற்காக

*உறுதியான செயல்களால் பதில் அளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை ஒரு குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

நம் தந்தையாகிய இறைவனின் திட்டம் நமக்கு வெவ்வேறு நிலைகளில் வெளிப்படுத்தப்படுகிறது. மேலும், எந்த நேரத்திலும் நாம் அனைத்தையும் முழுமையாக அறிய முடியாது.

## நற்செயல் புரிவோம்

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

உங்களது சவால்களையும் அதைச் சார்ந்த வசனங்களையும் ஒரு அட்டையில் அருகருகே பட்டியலிட்டு அலங்கரிக்கவும். இதை ஐந்து பிரதிகள் எடுத்து, அதன் ஒவ்வொன்றிலும் நீங்கள் செபிக்கும் ஐந்து நபர்களின் பெயர்களையும் எழுதவும்.

திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறு

# வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்

## நிறைவு செபம்

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

எங்கள் தந்தையாகிய இறைவனே,

உமது திருமகனையும், வார்த்தைகளையும், இங்கு கூடியுள்ள எங்கள் ஒவ்வொருவரிலும் உமது பிரசன்னத்தையும் தந்தமைக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது கொடைகளில் நீர் தாராளமாக இருக்கிறீர், ஆனால் எங்களது கடினச் சூழ்நிலைகளில் உமது கொடைகளை நாங்கள் மறந்து விடுகிறோம். சவால்கள் எங்கள் வழியில் வரும்போது நீர் கூறிய வார்த்தைகளை எங்கள் இதயத்தில் வைத்துச் சிந்திக்க அருள் தாரும். உமது அன்பையும், உமது மகனின் மீட்புப் பணியையும் நினைவுகூரும் போது எங்களது நம்பிக்கை தொடர்ந்து புதுப்பிக்கப்படுவதாக. எங்கள் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்கு எங்களைத் தயார்படுத்தியருளும்.

ஆமென்.

# என் திருவருகைக்காலச் சிந்தனைக் குறிப்புகள்

கிறிஸ்து பிறப்புக் கால ஞாயிறுகள் [முதல் ஆண்டு]

# நம்மிடையே புதிய வார்த்தை



கிறிஸ்து பிறப்புக் கால ஞாயிறுகள் [முதல் ஆண்டு]

# நம்மிடையே புதிய வார்த்தை

| வாரங்கள் | இறைவார்த்தை | கருப்பொருள் |
|---|---|---|
| கிறிஸ்து பிறப்புப் விழா | எசாயா 52 : 7 – 10<br>எபிரேயர் 1 : 1 – 6<br>யோவான் 1 : 1 – 18 | வார்த்தை நமக்காக மனுவுருவாயிற்று |
| மரியா, இறைவனின் தாய் பெருவிழா | எண்ணிக்கை 6 : 22 – 27<br>கலாத்தியர் 4 : 4 – 7<br>லூக்கா 2: 16 – 21 | வார்த்தையை வாழ்தல் |
| ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா | எசாயா 60 : 1 – 6<br>எபேசியர் 3 : 2 – 3, 5 – 6<br>மத்தேயு 2 : 1 – 12 | அனைவருக்கும் வார்த்தை |



கிறிஸ்து பிறப்புப் பெருவிழா

# வார்த்தை நமக்காக மனுவுருவாயிற்று

## தொடக்கச் செபம்

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

அன்புத் தந்தையே இறைவா,

நீர் எல்லா மக்களையும் அற்புதமாகப் படைத்தீர். இன்னும் அற்புதமாக உமது திருமகனின் மனுவுருவால் மனிதக்குல இயல்பின் கண்ணியத்தை மீட்டெடுத்தீர். எங்கள் மனிதநேயத்தைப் பகிர வந்தவருடைய தெய்வீக வாழ்வையும், எங்கள் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவையும் நாங்கள் ஒரே சமூகமாகப் பகிர வரமருளும்.

ஆமென்.

## இறைவார்த்தை

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்துப் பின் அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

### முதல் வாசகம்
### எசாயா 52 : 7 – 10

இந்த வசனங்களில் என்னே ஒரு உற்சாகமான மகிழ்ச்சியொலிகள்! மூன்று குரல்கள் ஒன்றன் பின் ஒன்றாக எதிரொலிப்பதை நாம் கேட்கிறோம். முதலாவதாக, நம் தந்தையாகிய இறைவனின் அமைதியும் மீட்பும் ஆட்சி புரியும் என்று எதிர்பார்க்கப்பட்ட நற்செய்தியைக் கொண்டு வரும் தூதரின் குரலொலி. நம் தந்தை இஸ்ரயேலை மீட்டெடுத்து, அதன் சிறையிருப்பு முடிவுக்கு வந்துவிடும். இரண்டாவதாக, கடவுள் சீயோனுக்குத் திரும்புவதைக் காணும் போது காவலாளிகளின் குரல்களைப் பாடலாகக் கேட்கிறோம். இனி, கடவுளின் பிள்ளைகள் கைவிடப்படாமல், எப்போதும் அவருடன் பாதுகாப்பாக வாழ முடியும். இறுதியாக, எருசலேமின் குரலைக் கேட்கிறோம். அந்த இடிபாடுகளுக்கு இடையிலும் கடவுளின் ஆறுதலையும் வாக்களிக்கப்பட்ட மீட்பையும் அனுபவிக்கும் அவளுடைய மகிழ்ச்சியைக் காண்கிறோம்.

### இரண்டாம் வாசகம்
### எபிரேயர் 1 : 1 – 6

எக்ஸார்டியம் என்று அழைக்கப்படும் முதல் நான்கு வசனங்கள், எபிரேய மொழியில் முன் வைக்கப்பட்ட மற்ற வாதங்களுக்கு வாசகர்களைத் திசைதிருப்ப சிந்தனையோடு கூடிய ஒரு அறிமுகமாகும். கிரேக்க மொழியில், இந்த நான்கு வசனங்களும் உண்மையில் ஒரு தனி வாக்கியமாகும். இதிலுள்ள அசைகளும் யாப்பிலக்கணமும் இலக்கிய நுட்பங்கள் நிறைந்தவை. இதன் மையத்தில் இயேசு கிறிஸ்துவின் மேன்மையின் கொண்டாட்டமான ஒப்புதல் வாக்கு உள்ளது. அவர் நம் தந்தையாகிய இறைவனின் நிலையான மகன், எல்லா உயிர்களுக்கும் வாரிசு. அவர் இறைவனின் சரியான முத்திரையைத் தாங்கியுள்ளார். நம் பாவங்களுக்கு நிறைவானப் பரிகாரம் செய்திருக்கிறார். ஆகவே, அவர் எல்லா இறைவாக்கினர்களையும் வான தூதர்களையும் விட மிக மேலானவர்.

### நற்செய்தி வாசகம்
### யோவான் 1 : 1 – 18

இந்த முன்னுரையை நாம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது, மனுவுருவான வார்த்தையைப் பற்றி விவரிக்கிறது (வச 1-5). இயேசு கிறிஸ்து இருளைக் கடக்கும் ஒளியாக இந்தப் பிரபஞ்ச பரப்பளவில் அமைந்துள்ளார். இரண்டாவது, இந்த ஒளிக்கு அடுத்த நிலையில், இந்த வார்த்தைக்கான சாட்சியாக யோவான் தன்னையே நிலைநிறுத்திக்கொள்ளும் ஒரு முன்னோட்டம் (வச 6-9, 15). மூன்றாவது, இந்த வார்த்தைக்கு மனித குலத்தின் பதிலைத் தாங்குகிறது (வச 10-13). இயேசு கிறிஸ்து தன்னை நம்புவோருக்கு இறைவனின் பிள்ளைகளாக மாறும் வல்லமையை அளிக்கிறார். இறுதியாக, வார்த்தை மனுவுருவானதைப் பற்றி விவரிக்கிறது (வச 14-18). இயேசு கிறிஸ்து நம்மிடையே நம்மோடு வாழ வந்தார். அதனால், அவர் வழியாக நாம் தந்தையின் இதயத்தை உண்மையாக அறிய முடியும்.

## தியானிப்போம்:

இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

'இயேசு கிறிஸ்து யார்?' என்ற கேள்விக்கு இன்று நாம் பல விதமான பதில்களை, வெவ்வேறு மக்களிடமிருந்து, அவர்களது சொந்த விளக்கங்களோடு பெற முடிகிறது. உதாரணமாக, சிலர் இயேசுவை ஒரு செல்வாக்குமிக்கத் தார்மீக ஆசிரியராகவோ, அறிவொளி பெற்ற குருவாகவோ பார்க்கிறார்கள். சில மதங்கள் இயேசுவை கடவுள் அனுப்பிய ஒரு இறைவாக்கினராகக் கருதுகின்றன. மற்றவர்கள் இயேசுவைக் கடவுளின் மகனாகவும், ஒரு தெய்வீக அவதாரங்களில் ஒன்றாகவும் கருத்து கொண்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலோர், கிறிஸ்து தங்கள் பாவங்களுக்காக உயிரைக் கொடுத்தார் என்றோ, மேலும் சிலர் அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதையோ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவ்வாறு, பல முரண்பாடானக் கருத்துக்கள் உள்ள நிலையில், உண்மை என்ன? கிறிஸ்துவைப் பற்றிய நமது நம்பிக்கைக்கு நாம் எதைச் சார்ந்திருக்கிறோம்? கத்தோலிக்கர்களாக, திருஅவையால் ஒளிரும் கடவுளின் வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட உண்மையின் மீது தான் நமது நம்பிக்கை நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

இன்றைய வாசகங்கள், இயேசு யார், அவர் ஏன் வந்தார் என்பதற்கான ஒரு ஒருங்கிணைந்த வரைபடத்தை நமக்குக் காட்டுகிறது. முதல் வாசகத்தில், கடவுளே தம் மக்களுக்கு ஆறுதல் அளிக்கவும், மீட்கவும் திரும்பி வருவதைப் பற்றி மகிழ்ச்சியான எதிர்பார்ப்புடன் தூதரும், காவலரும், எருசலேமின் குரல்களும் பேசுவதைக் கேட்கிறோம். இரண்டாம் வாசகத்தில், இயேசு நம் தந்தையாகிய இறைவனால் அனுப்பப்பட்ட இறைவாக்கினருக்கும் மேலானவர் என்றும் காண்கிறோம். தூய தமத்திரித்துவத்தின் இரண்டாம் நபராக, இயேசு கடவுள், இறைவனின் திருமகன். அவர் தொடக்கத்திலிருந்தே தந்தையோடு இருந்து எல்லாவற்றையும் படைத்தார். இயேசு உண்டாக்கப்பட்டவர் அல்ல என்பதால், தன்னை வழிபடும் படைக்கப்பட்ட வான தூதர்களைவிடவும் மேலானவர்.

நற்செய்தியில் யோவான் இயேசுவை முன்னால் இருந்த நிலையான 'வார்த்தை மனுவுருவாகி, நம்மிடையே குடிகொண்டது' எனக் கூறியுள்ளார். இந்த மறைபொருளை நாம் 'மனிதவதாரம்' என்று அழைக்கிறோம், அதாவது பாவம் தவிர மற்ற எல்லாவற்றிலும் அவர் நம்மைப் போலவே மனிதனாக வாழ்ந்தார். பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கவும், விண்ணகத்திற்கான வழியைத் திறக்கவும், அவருடன் நிலைவாழ்வைப் பெறவும் கடவுள் இதைச் செய்தார். இயேசு வழியாக நம்மை மீட்க ஒரு விலைமதிப்பற்ற, தாழ்ச்சியான, மனிதவதார முறையைக் கடவுள் கையாள வேண்டியிருந்தது. இது, முதல் வாசகத்தில் வெளிப்படுத்தப்பட்ட அனைத்து பெரிய எதிர்நோக்குகளையும் நிறைவேற்றுகிறது. மேலும், நாம் கிறிஸ்து பிறப்பு விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டிய காரணமாகவும் இது அமைகிறது.

உங்களுக்கு இயேசு கிறிஸ்து யார்? நீங்கள் எதை நம்புகிறீர்கள்? இக்கேள்விகள் ஒரு பதிலை எதிர்பார்க்கிறது. இயேசு கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் நம்புவது நீங்கள் இப்போது வாழும் வாழ்வை மட்டுமல்ல, வரவிருக்கும் மறுவுலக வாழ்வையும் தீர்மானிக்கும். இந்த உண்மையை நாம் எந்தளவுக்கு மனதில் வைத்திருக்கிறோமோ, அந்த அளவுக்கு நாம் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழாவை உண்மையாகக் கொண்டாட முடியும்.

## சிந்திப்போம்: பகிர்வுக்கானக் கேள்விகள்

இந்தப் பகுதி தனிநபர் மற்றும் குழுக்களுக்கானப் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் எனும் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுவினர் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால் பகிருங்கள்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியப் பகுதி எது? அதைச் சற்று சிந்தியுங்கள்.*

- கிறிஸ்து பிறப்பை விழாவைக் கொண்டாட நீங்கள் என்ன செய்கிறீர்கள்?
- கிறிஸ்து பிறப்பு விழாவில இயேசுவோடு இருக்க நேரம் ஒதுக்கியிருக்கிறீர்களா?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் குழுச் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கலாம்.*

### அன்பியங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- நமது அன்பியத்தில் ஒருவரோடொருவருடன் உள்ள உறவில் கிறிஸ்துவை எந்த வழிகளில் அவதரிக்கலாம்?
- மூன்று குரல்கள் இறைவனைப் பற்றிய மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது போல, அன்பியமாக நாம் அவரது பிறப்பின் மகிழ்ச்சியை அனுபவிக்காதவர்களுக்கு எவ்வாறு அறிவிப்பது?

### ஆலயப் பணிக்குழுக்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- மற்றவர்களுக்காற்றும் ஆலயப்பணியில் திருமுழுக்கு யோவானின் பணிவை நாம் எவ்வாறு கடைப்பிடிக்கிறோம்?
- கடவுள் நம்மை எவ்வளவு அன்பு செய்கிறார் என்பதை இயேசு வழியாகப் பார்க்கலாம். இந்தக் கிறிஸ்து பிறப்பு விழாவில், மற்றவர்களும் இயேசு தங்களையும் அன்பு செய்கிறார் என அறியச் செய்ய, ஒரு பணிக்குழுவாக நாம் அதை எவ்வாறு வெளிக்கொணர முடியும்?

### குடும்பங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- இன்றைய கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டம் எவ்வளவு அர்த்தமுள்ளதாக இருந்தது?
- கடவுள் நம்மை அன்பு செய்கிறார் என்பதைக் காட்ட இயேசு வந்தார். கிறிஸ்து பிறப்பு விழாவை அறியாத ஒருவருக்கு இதன் அதிசயத்தை உணர குடும்பமாக நாம் எப்படி உதவ முடியும்?

## நம் வாழ்விற்காக

*உறுதியான செயல்களால் பதில் அளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை ஒரு குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

இயேசு கிறிஸ்துவில் நீங்கள் எவ்வளவு உறுதியாக இருக்கிறீர்கள் என்பது நீங்கள் இப்போது வாழும் வாழ்வையும், வரவிருக்கும் மறுவுலக வாழ்வையும் தீர்மானிக்கும்.

## நற்செயல் புரிவோம்

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

அந்த ஐந்து நபர்களையும் தனித்தனியாகச் சந்தித்து அவர்களுக்கு நீங்கள் தயாரித்த அட்டையை வழங்கவும். ஆண்டவர் அவர்களைத் தனித்து விடமாட்டார் என்பதை அவர்கள் உணர அவர்களை அழைத்து உபசரிக்கவும்.

# வார்த்தை நமக்காக மனுவுருவாயிற்று

## நிறைவு செபம்

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

தந்தையே,

எங்கள் கால்களுக்கு விளக்காகவும், எங்கள் பாதைக்கு ஒளியாகவும் இருக்கும் உமது வார்த்தைக்காகவும், மனுவுருவான வாழ்வளிக்கும் வார்த்தையும், உலகிற்கு ஒளியாகவும் வந்த இருளற்றவராகிய எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிறிஸ்துவின் மாட்சியையும் ஒளியையும் பிரதிபலிக்க உலகிற்கு விளக்குகளாகத் திகழ நீர் எங்களை அழைத்தீர். நாங்கள் இயேசுவின் பெயரால் உமக்குகந்த மக்களாக இருக்க வேண்டுமென்று நீர் விரும்புகிறபடி எங்களை மாற்றியருளும்.

ஆமென்.

# என் கிறிஸ்து பிறப்புக்காலச் சிந்தனைக் குறிப்புகள்

மரியா, இறைவனின் தாய் பெருவிழா

# வார்த்தையை வாழ்தல்

## தொடக்கச் செபம்

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

என்றும் வாழும் எல்லாம் வல்ல தந்தையே,

இறைவனின் தாயானக் கன்னி மரியாவின் பெருவிழாவை நன்றியுடன் நினைவு கூருகிறோம். எங்களை உம்மிடம் சேர்க்க வேண்டும் என்ற உமது விருப்பத்தை ஆழமாக உணர்ந்து, உம்மிடம் திரும்புகிறோம். மீட்பின் மறைபொருளில் அன்னை மரியா ஆற்றிய அற்புதமானப் பங்கை நினைவில் கொள்ள எங்களுக்கு உதவியருளும். உமது தெய்வீகத் திட்டத்திற்கு அவள் 'ஆம்' என்று சொன்ன விதத்தையும், அவர் எவ்வாறு உமது வார்த்தையை வாழ்ந்து தன் இதயத்தில் சிந்தித்துப் பார்த்தார் என்பதையும் நாம் பின்பற்றுவோமாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

## இறைவார்த்தை

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்துப் பின் அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

### முதல் வாசகம்
### எண்ணிக்கை 6 : 22 – 27

கி.மு. 13ம் நூற்றாண்டில் எகிப்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு சென்ற எபிரேயர்களின் பயணக் கதையின் சில பகுதிகளை எண்ணிக்கை நூல் விவரிக்கிறது. இருப்பினும், கி.மு. 6ம் நூற்றாண்டில் இவர்கள் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட பின்னர் தான் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இறுதியாக அவர்கள் தங்கள் தாயகம் திரும்பியபோது, அவர்களின் குருக்கள் நாட்டின் புகழ்பெற்ற வரலாற்று உணர்வை மீட்க விரும்பினர். மோசே வழியாக ஆரோனுக்கும் அவருடைய குருக்களும் நம் தந்தையாகிய இறைவன் அளித்த ஆசீரை இதன் வழியாக விவரிப்பது ஒரு வழியாகும். ‘ஆண்டவர் தம் திருமுகத்தை உன் மேல் ஒளிரச் செய்வாராக!’ என்ற வசனம் தான் நம் தந்தையாகிய இறைவன் மீது இஸ்ரயேலர் கொண்டப் புரிதலில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிக்கிறது. நம் தந்தையாகிய இறைவனின் முகத்தைப் பார்ப்பது சாத்தியமென்றாலும் அது ஆபத்தானது என்று அவர்கள் நம்பினர். இருப்பினும், இங்கே நம் தந்தையாகிய இறைவன் தம் முகம் அவர்கள் மீது ஒளிர வேண்டும் என்றும், அவர்களைக் ‘கனிவுடன்’ பார்க்க வேண்டும் என்றும் மக்களிடம் கூறுகிறார். இது படிப்படியாக வளர்ந்து வரும் அன்புக் கடவுள் மீதுள்ள நம்பிக்கையைக் குறிக்கிறது. இது இன்றைய வாசகங்களில் மேலும் வெளிப்படுத்தப்படுகிறது.

### இரண்டாம் வாசகம்
### கலாத்தியர் 4 : 4 – 7

விருத்தசேதனம் போன்ற மோசேயின் பழைய சட்டங்களை தங்கள் மேல் சுயமாக விதித்துக் கொண்ட கலாத்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களை அதிலிருந்து விடுவிப்பதே தூய பவுல் எழுதிய இக்கடிதத்தின் நோக்கம். சிலர் தாங்கள் மீட்பு பெற இதைச் செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். ‘திருச்சட்டத்திற்கு உட்பட்ட இயேசு’, பழைய சட்டங்களின் அடிமைத் தனத்திலிருந்து அனைவரையும் மீட்டதால், அது தேவையற்றது என தூய பவுல் வாதிடுகிறார். கடவுளின் மகன் ‘ஒரு பெண்ணின் வயிற்றில்’ சக மனிதனாக இவ்வுலகில் பிறந்ததால், அனைத்து கிறிஸ்தவர்களும் இப்போது இந்த தெய்வீக மகத்துவத்தில் பங்கு கொண்டு, கடவுளை ‘அப்பா’ என்று நெருக்கமாக அழைக்க தூய பவுல் வலியுறுத்துகிறார். கிறிஸ்தவர்கள் இந்த மகத்துவத்தில் பங்குகொண்டால், அவர்களும் இறையாட்சியின் வாரிசுகள். கிறிஸ்துவின் மனித அவதாரத்தில் மரியாவின் பங்கு குறிப்பிடத்தக்கது என இவ்வாசகம் குறிப்பிடுகிறது. மனிதனான மரியாவிடமிருந்து மனுவுரு எடுத்ததால் இன்று நாம் இந்தப் பெருவிழாவை கொண்டாடுகிறோம்.

### நற்செய்தி வாசகம்
### லூக்கா 2 : 16 – 21

தெய்வீக வெளிப்பாட்டுக்கு இரு மாறுபட்ட பதில்களை இந்த நற்செய்தி வாசகம் வழங்குகிறது. இடையர்கள் வானதூதர்களிடமிருந்து பெற்ற செய்தியின்படி உற்சாகமாக பெத்லகேமிலுள்ள மாட்டுத் தொழுவில் இயேசுவைக் கண்டு, குழந்தையைப் பற்றி தாங்கள் கற்றதைப் பிறருக்குத் தெரிவித்தார்கள். கிறிஸ்துவைப் பற்றி உலகிற்கு முதலில் நற்செய்தி அறிவித்தவர்கள் இவர்களே. மறுபுறம், மரியா அமைதியாக ‘இவற்றையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்தாள்’ ஆகவே, மரியா கடவுளின் வார்த்தையை தியானித்து அதை ஆழமாக வாழும் ஒரு நபராக காணப்படுகிறார். இது அநேகமாக அவளது மகனின் பிறப்பைச் சுற்றியுள்ள அனைத்து அசாதாரண சூழ்நிலைகளையும் ஏற்றுக்கொள்ள அவளுக்கு உதவியது. இறுதியில் அவருடைய சீடராகி திருஅவையை உருவாக்க உதவியது. கடவுளின் திட்டத்திற்கு அவள் உண்மையாக இருப்பதாலும், இயேசுவின் தெய்வீகப் பணியுடனான அவளுடைய நெருங்கிய தொடர்பாலும், அவள் நமக்கு சீடத்துவப் பாதையின் முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

## தியானிப்போம்:

இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

சிறந்த ஆசீருடன் ஒரு புது வருடத்தைத் தொடங்க சிறந்த வழி எது? ஆரோனுக்கும், இஸ்ரயேலின் குருக்களுக்கும் நம் தந்தையாகிய இறைவன் அளித்த ஆசீர் போலவே கடவுள் அவர்களுக்கு இரக்கம் காட்டி அமைதியை வழங்குவார். நம் தந்தையாகிய இறைவன் தம் மக்களை ஆசீர்வதிக்கிறார் என்ற இக்கருப்பொருள் இன்றைய மூன்று வாசகங்களிலும் வெளிப்படுகிறது. முதல் வாசகம், தங்கள் வரலாற்றில் மிகவும் துன்புற்ற இஸ்ரயேலர்கள் மீது கடவுள் கொண்ட மிகுந்த அன்பைக் காட்டுகிறது. ஆரோனும் அவருடைய குருக்களும் இஸ்ரயேலர்கள் மீது இந்த ஆசீரைப் பொழிய வேண்டும். கடவுள் நிச்சயமாக அவர்களை 'ஆசீர்வதிப்பார்'.

இந்த அன்பு, நற்செய்தியில் மேலும் மேம்படுகிறது. நம் தந்தையாகிய இறைவன் மக்களை அவர்களது பாவங்களிலிருந்து மீட்க உலகிற்குத் தம் மகனை அனுப்புகிறார். இரண்டாம் வாசகம் கடவுளின் அன்பைப் பற்றிய நமது புரிதலை மேலும் விரிவுபடுத்துகிறது. நாம் அவருடைய அன்புக் குழந்தைகள். கிறிஸ்து ஒரு பெண்ணிடமிருந்து பிறந்ததால், மனிதச் சட்டத்தின் கீழ், நம்மைப் போலவே, அவர் நம் சகோதரர் என அடிப்படைச் செய்தி கூறுகிறது. கிறிஸ்து கடவுளை அவரது தந்தை என்று அழைத்தால், நாமும் அவ்வாறு செய்யலாம். எனவே, நாம் அனைவரும் தந்தையின் பிள்ளைகள் என்றால், நாமும் கிறிஸ்துவுடன் இறை ஆட்சியின் இணையான வாரிசுகள்.

வாசகங்கள் வழியாக வெளிப்படும் மற்றொரு கருப்பொருள் மீட்பின் வரலாற்றில் மரியாவின் பங்கு. திருத்தந்தை பிரான்சிஸ், 2014ம் ஆண்டின் இப்பருவிழாவுக்கானத் தனது செய்தியில், முதல் வாசகத்தில் உள்ள ஆசீர் மரியாவின் பங்கைச் சுட்டிக்காட்டுவதாகக் குறிப்பிட்டார். இந்த ஆசீர்வாதமான வார்த்தைகளைக் கேட்கப் புது வருடத் தொடக்கத்தைக் காட்டிலும் அர்த்தமுள்ள நேரம் வேறு எதுவும் இல்லை' என்று அவர் கூறினார். இந்த ஆசீர்வாதத்தில் உள்ள நம்பிக்கையின் செய்தி, இறைவனின் தாயாக மாற விதிக்கப்பட்ட ஒரு பெண்ணான மரியாவில் முழுமையாக உணரப்பட்டது. மேலும் அது எல்லா உயிரினங்களுக்கும் முன்பாக மரியா வழியாக நிறைவேறியது.

மரியாவின் கீழ்ப்படிதல் உலகம் இது வரை அறிந்திராத அற்புதமானதொரு அதிசயத்தைக் கொண்டு வந்தது. அது தான் இறைவனின் அவதாரமான அன்பு, இயேசு, அமைதியின் இளவரசர். நம் தந்தையாகிய இறைவனின் மீட்புத் திட்டத்தில் மரியாவின் பங்கின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக, புது வருடத்தின் முதல் நாளில் நம் திருஅவை இந்த விழாவைக் கொண்டாடுகிறது. இவ்வுலகில் அமைதிக்காகப் பரிந்து பேசுவதில் மரியாவின் வல்லமை வாய்ந்தப் பங்கை அங்கீகரித்து நமது தாய்த் திருஅவை இந்நாளை உலக அமைதி தினமாகக் கொண்டாடுகிறது.

## சிந்திப்போம்: பகிர்வுக்கானக் கேள்விகள்

இந்தப் பகுதி தனிநபர் மற்றும் குழுக்களுக்கானப் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் எனும் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுவினர் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால் பகிருங்கள்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியப் பகுதி எது? அதைச் சற்று சிந்தியுங்கள்.*

- இறை வார்த்தையை நமது வாழ்வாக்குவது என்பதன் பொருள் என்ன?
- இறை வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில் உங்களுக்கு எவ்வளவு சிரமம் இருக்கிறது?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்

*உங்கள் குழுச் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கலாம்.*

### அன்பியங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- ஒரு சமூகமாக நாம் எவ்வாறு இறை வார்த்தையை வாழ்வாக்கலாம்?
- நமது சிந்தனைகளும் செயல்களும் எவ்வாறு இறை வார்த்தையை அதிக அடிப்படையாகக் கொண்டிருக்க இருக்க முடியும்?

### ஆலயப் பணிக்குழுக்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- இடையர்கள் வானதூதரின் செய்தியை ஆர்வத்துடன் பிறரிடம் பகிர்ந்துகொண்டது போல, நாம் பணியாற்றும் மக்களுடன் இறை வார்த்தையை எவ்வாறு மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ள முடியும்?
- இதை அடைய நாம் எடுக்க வேண்டிய உறுதியான நடவடிக்கைகள் என்ன?

### குடும்பங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- மரியா தனது வாழ்வில் நடந்த நிகழ்வுகளை ஆழமாகச் சிந்தித்தது போல, ஒரு குடும்பமாக நாமும் நமது செபங்களிலும் விவிலியப் பகிர்வுகளிலும் இறை வார்த்தையை எவ்வாறு ஆழமாகச் சிந்திக்க முடியும்?
- நம் குடும்ப விவாதங்களிலும் முடிவெடுக்கும் செயல்முறைகளிலும் இறை வார்த்தைக்கு இடமிருக்கிறதா?

## நம் வாழ்விற்காக

*உறுதியான செயல்களால் பதில் அளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை ஒரு குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

பிறரைக் கிறிஸ்துவில் சகோதர சகோதரிகளாகக் கருதி நம் தந்தையாகிய இறைவன் அவர்களை எப்படிக் காண்கிறார் என்பதை அவர்களுக்கு உணர்த்தலாம்.

## நற்செயல் புரிவோம்

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

அவிசுவாசிகள் சிலரை வரும் ஞாயிறு மதிய உணவுக்கு அழைக்கவும். இயேசுவின் பிறப்பைப் பற்றி அவர்களிடம் பேசுங்கள். நற்செய்தி அனைவருக்கும் உரியது. உங்களுக்கு உதவ நீங்கள் சிலரை அழைக்கலாம்.

மரியா, இறைவனின் தாய் பெருவிழா

# வார்த்தையை வாழ்தல்

## நிறைவு செபம்

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத் தந்தையே,

இறைவனின் தாயானக் கன்னி மரியாவின் பெருவிழாவிற்கு நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். அன்னை மரியாள் தன் வாழ்வில் உமது வார்த்தையைப் பற்றிச் சிந்தித்ததைப் போல, எங்கள் வார்த்தைகளில் புதிதாக உமது வார்த்தையைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க உம்மை நாங்கள் மன்றாடுகிறோம். நீர் என்றென்றும் எங்கள் மீது பொழியும் தாராளமான ஆசீரைக் கண்டுணர எங்கள் கண்களைத் திறந்தருளும். மரியாவைப் போல, எங்களுக்கான உமது திட்டங்களுக்கு 'ஆம்' என்று பதிலளிக்க எங்களுக்கு உதவியருளும். நாங்கள் உம்மைப் போற்றிப் புகழ்ந்து உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஆமென்.

# என் கிறிஸ்து பிறப்புக்காலச் சிந்தனைக் குறிப்புகள்

# அனைவருக்கும் வார்த்தை

## தொடக்கச் செபம்

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும், இறைவார்த்தைக்கும் மற்றவருக்கும் திறந்த மனதுடன் செவிசாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

விண்ணகத் தந்தையே,

இந்தக் கிறிஸ்து பிறப்புக் காலத்தை மிகுந்த மகிழ்ச்சியுடன் நாங்கள் கொண்டாடுகிறோம். மனுவுருவான வார்த்தையான உமது திருமகன் பகுத்தறியும் உள்ளங்களுக்கு வெளிப்படுத்தப்படுவதால், உமது நிலையானப் பிரசன்னத்தை, நாங்கள் எதிர்பாரா மக்களிடமும் இடங்களிலும் குறிப்பாக அனுபவிக்கும்படி எங்கள் உள்ளங்களை வடிவமைத்தருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

## இறைவார்த்தை

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங்களையும் சத்தமாக வாசித்தப் பின் அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங்களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.*

### முதல் வாசகம்
### எசாயா 60 : 1 – 6

யார் மேல் வீச வேண்டுமென்று ஒளி எவரையும் தேர்ந்தெடுப்பதில்லை. ஒளிக்கதிர்கள் அவற்றின் பாதையில் உள்ள எல்லாவற்றின் மீதும், எல்லாத் திசைகளிலும் பிரகாசிக்கின்றன. கடவுளின் நகரமான எருசலேமின் ஒளி இருளில் பிரகாசிக்கிறது. அதாவது இருள் ஒளியால் தொடப்படுவதால் இனி இருள் இருக்காது. எருசலேமில் மட்டுமல்ல, கடவுளின் தேர்ந்தெடுத்த, எல்லா இடத்திலும் உள்ள, எல்லா கடவுளின் பிள்ளைகள் மீதும் இவ்வொளி பிரகாசிக்கும். கடவுளின் அன்பு ஒளியும், கடவுளின் இதயமும் முழுமையாகத் துடித்து, அனைவர் மீதும் மிகுதியாகப் பாய்கிறது. பற்றாக்குறையின் பயத்தில் வாழ்வோரும், பகிரும் மனப்பக்குவம் இல்லாதவர்கள் மட்டுமே இந்த அன்பு ஒளியைக் கட்டுப்படுத்த விரும்புவர், நம் தந்தையாகிய இறைவன் அப்படிப்பட்டவரல்ல.

### இரண்டாம் வாசகம்
### எபேசியர் 3 : 2 – 3, 5 – 6

தூய பவுலிடம் ஒப்படைக்கப்பட்ட அருளின் மறைபொருள் நமக்கும் உரியது. அதை நம்புவதற்கு நாம் அதை உண்மையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அருள் அருளாக இருக்க நாம் அதைச் சம்பாதிக்க முடியாது, மேலும் அது முற்றிலும் இலவசம். சிலர் ‘அருளை’ கடவுளின் நட்பு என்று அழைக்கிறார்கள். மேலும், உண்மையான நட்பை கட்டாயத்தினாலோ, சம்பாதித்தோ பெற முடியாது என்பது நமக்குத் தெரியும். இது ஒரு மறைபொருள் மற்றும் நிறைவானக் கொடை. கடவுளின் இரக்கம், எல்லா கடவுளின் மக்களுக்கும் உரியது. யூதரும் பிற இனத்தாரும் இதில் அடங்குவர் எனத் தூய பவுல் தைரியமாகக் கூறுகிறார். கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே வேறு எந்த வேறுபாடும் இருக்காது. ஏனென்றால் கடவுள் தனக்குச் சொந்தமானவர்கள் என்று யாரையும் தேர்ந்தெடுப்பதில்லை.

### நற்செய்தி வாசகம்
### மத்தேயு 2 : 1 – 12

மிக அருகில் என்றாலும் தூரம். யூதர்களின் அரசனாகப் பிறந்தக் குழந்தை ஏரோது மன்னனுக்கு மிக அருகில் இருந்தாலும், அந்தப் பிரசன்னத்தை அவர் உணரவில்லை. உண்மையில், அவர் தனது பயத்தாலும் பாதுகாப்பின்மையாலும் அக்குழந்தையைக் கொல்ல விரும்புகிறார். மாறாக, தொலைதூரத்தில் உள்ள ஞானிகள், இஸ்ரயேலை மீட்க நம் தந்தையாகிய இறைவனால் அனுப்பப்பட்ட அந்தக் குழந்தைக்கு அஞ்சலி செலுத்தி, பரிசுகளை வழங்கி, அவரை வணங்க வருகிறார்கள். பகுத்தறியும் இதயத்துடன் இருந்த இப்பிற இனத்தாருக்கு மனுவுருவான வார்த்தை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அக்குழந்தையின் எதிர்காலம் அவர்கள் கொண்டு வந்தப் பரிசுகள் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது: தங்கம் (அரசாட்சி), தூபம் (கடவுள்), வெள்ளைப்போளம் (தியாகம்).

## தியானிப்போம்:

இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

நாம் அடிக்கடி நமது வார்த்தைகளால் நம்மை வெளிப்படுத்துகிறோம். நம் தந்தையாகிய இறைவனும் தமது வார்த்தைகளால் தம்மை வெளிப்படுத்துகிறார். மேலும், அவரது வார்த்தை இயேசு என்ற வார்த்தையாக மனுவுருவாகி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய மாபெரும் கொண்டாட்டம் இந்த இயேசு யார் என்பதை இவ்வுலகம் முழுவதற்கும் வெளிப்படுத்தப்படும் ஒரு அற்புதமானத் திருவிழா.

கடவுள் தம்மை நமக்கு வெளிப்படுத்த முயற்சிக்கிறார். அதனால் நாம் யார் என்பதையும், நாம் எவ்வாறு முழுமையான வாழ்வை வாழ முடியும் என்பதையும் நமக்கு வெளிப்படுத்த முயற்சிக்கிறார். கடவுள் என்னைத் தவிர மற்ற அனைவரையும் அன்பு செய்கிறார் என்று நான் நம்பினால் நான் தகுதியற்றவன், கடவுளின் அன்பிற்கும் நான் தகுதியற்றவன். ஏனென்றால் நானே என் தலையில் மண்ணை வாரிப் போடுகிறேன். கடவுளின் இரக்கத்திற்கு தகுதி தேவையில்லை, அது முற்றிலும் இலவசமானது. கடவுளின் இரக்கத்தை அப்படியே நான் ஏற்றுக் கொள்ள நான் உண்மையாக என் கண்களையும் இதயத்தையும் திறந்து, அவரை முழுமையாகத் தழுவினால், அவருடையப் பிரசன்னத்தால் நான் மூடப்படுவேன்.

தகுதிகளை எதிர்பார்க்கும் ஒரு சமூகத்தில், உழைப்பில்லாத ஒரு பரிசை ஏற்றுக் கொள்வது மிகக் கடினம். ஆனால், இதுவே நம் கடவுள் யார் என்பதன் நிதர்சனம். தங்களைத் தாழ்த்திய இடையர்கள் வழியாகவும், பிற இனத்தாரான ஞானிகள் வழியாகவும், நம் தந்தையாகிய இறைவன் இயேசுவின் பிறப்பாலும் திருக்காட்சியாலும் நம் அனைவரையும் வரவேற்கிறார் என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறார். எனவே, கடவுளின் அன்பு ஆட்சியில் அனைவருக்கும் ஒரு இடம் உண்டு, அதுவே கடவுளின் புதிய படைப்பு.

## சிந்திப்போம்: பகிர்வுக்கானக் கேள்விகள்

இந்தப் பகுதி தனிநபர் மற்றும் குழுக்களுக்கானப் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் எனும் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுவினர் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கான கேள்விகள்

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால் பகிருங்கள்.*
*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதி எது?*
*உங்கள் உள்ளத்தைத் தூண்டியப் பகுதி எது? அதைச் சற்று சிந்தியுங்கள்.*

- தற்போது உங்கள் இதயத்தின் ஆசை என்ன? இது ஆன்மீக ஆசையா?
- உங்கள் மீதும், உங்கள் வழியாக மற்றவர் மீதும் பிரகாசிக்கும் கடவுளின் இரக்கத்தை நீங்கள் உண்மையிலேயே அனுபவித்து ஏற்றுக்கொள்ள முடியுமா?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கான கேள்விகள்

*உங்கள் குழுச் சூழலுக்கு ஏற்பப் பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கலாம்.*

### அன்பியங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- ஞானிகளின் சமூகத்தைப் போலவே, ஒரே சமூகமாக நாம் கடவுளைத் தேடுவது எப்படி?
- கடவுள் எவ்வாறு நம் சமூகத்தின் விருந்தோம்பலை தனது அன்பின் ஒளியைப் போலப் பெரிதாக்குகிறார்?

### ஆலயப் பணிக்குழுக்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- நான் இந்த ஆலயப்பணியைச் செய்யும் போது என் இதயத்தின் விருப்பம் என்ன?
- என்னிடமிருந்து வேறுபட்ட அல்லது வித்தியாசமாக சிந்திக்கும் மக்களுடன் நான் எவ்வாறு இறை வார்த்தையை வாழ்வாக்குவது?

### குடும்பங்கள்

*உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைக் குடும்பத்தாருடன் பகிருங்கள்.*
*நீங்கள் வாசிக்கக் கேட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிச் சிந்தித்துப் பகிருங்கள்.*

- கடவுள் நமக்கான தனது திட்டங்களை/கவர்ச்சிகளை (கடவுளின் வரங்கள்) நமக்கு வெளிப்படுத்துகிறார். அவற்றை நான் எவ்வாறு ஏற்றுக் கொள்வது? இதை எனது குடும்ப உறுப்பினர்களிடமும் (குறிப்பாக என் பிள்ளைகளில்) நான் அங்கீகரிக்கிறேனா?
- நாம் குடும்பமாக இறைவனோடும் ஒருவரோடும் நாளுக்கு நாள் நெருங்கிய உறவை வளர்க்க குடும்பமாக சேர்ந்து கடவுளின் மீதுள்ள நம் விருப்பத்தை எப்படி அதிகரிக்கலாம்?

## நம் வாழ்விற்காக

*உறுதியான செயல்களால் பதில் அளிக்க இறைவார்த்தை எவ்வாறு நம்மை ஒரு குழுவாகவோ அல்லது தனித்தனியாகவோ அழைக்கிறது என்பதைக் கண்டறியவும்.*

கடவுளின் அன்பு ஒளி அனைத்து கடவுளின் பிள்ளைகளுக்கும் இலவசக் கொடை. இந்த அன்பு கடவுளின் திட்டங்களும் கொடைகளும் நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

## நற்செயல் புரிவோம்

*வேறு ஒரு நபருக்கு இயேசுவின் நற்செய்தியைப் பகிரவும் அறிவிக்கவும் உங்கள் செயல்.*

விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களிடம், நீங்கள் சொல்லத் தயார் செய்ததை அவர்களிடம் சொல்லுங்கள். ஒன்றாகச் சேர்ந்த பிறகு, மற்றொரு சமூக நிகழ்வுக்கு அவர்களை அழைக்கவும். இதனால் அவர்களுடன் நீங்கள் வைத்திருக்கும் உறவு ஆழமாக இருக்கும்.

ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா

# அனைவருக்கும் வார்த்தை

## நிறைவு செபம்

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

ஆண்டவரே,

எங்களிடையே புதிதாக வந்தமைக்காகவும், உமது வருகையின் நோக்கத்தை எங்களுக்குப் புதிதாக வெளிப்படுத்தியதற்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது அருளின் அழகான மறைபொருளைத் தழுவி, அதன் வழியாக உமது அன்பின் ஒளியை அனைவருக்கும் பிரகாசிக்க எங்களுக்கு தினமும் உதவியருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

# என் கிறிஸ்து பிறப்புக்காலச் சிந்தனைக் குறிப்புகள்

# பிற்சேர்க்கை

## திருவருகைக்கால / கிறிஸ்து பிறப்புக் கால நடவடிக்கைகள்

திருவருகைக் காலத்தின் போது, இயேசுவின் வருகை வலியுறுத்தப்படுகிறது:

1) அக்காலத்தில் அவர் பெத்லகேமில் வந்தது ~ முதல் கிறிஸ்துமஸ்

2) இக்காலத்தில் அவர் நமக்குத் திருப்பலி வழியாகவும், அருள் அடையாளங்கள் வழியாகவும், நமது அன்றாட செபத்தாலும் அலுவல்களாலும் கிடைக்கும் அருள் வழியாகவும் வருவது. அவருடைய திருவுளத்தின் கருவிகளாக விளங்கும் நமது அயலார் வழியாக அவர் நம்மிடம் வருகிறார். நம் தந்தையாகிய கடவுளின் வாழ்வை நமது வாழ்வாக நாம் ஏற்று வாழ்ந்து, நாம் சந்திக்கும் நபர்களுக்குக் கிறிஸ்துவை முன்வைக்கும்போது, அவர் நம் மூலமாக நம் அயலாரிடமும் வருகிறார்.

3) பிற்காலத்தில் அவர் வருவது ~ பரோசியா (மறு வருகை).

ஒரு குடும்பமாகவோ, சமூகமாகவோ, ஆலயப் பணிக்குழுவாகவோ நம் தந்தையின் அற்புதமானக் கொடையான இயேசுவைப் பெறுவதற்கு நீங்கள் எவ்வாறு தயாராகலாம் என்று சிந்தியுங்கள். இந்தக் கொடையைப் பெறவும், தந்தை நம்மீது வைத்திருக்கும் இந்த அன்பின் ஆழத்தைக் கண்டறிந்து, நம் அன்றாட வாழ்வில் தந்தையின் வார்த்தையை வாழ்வாக்கி, அதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு குடும்பமாகவோ, சமூகமாகவோ, ஆலயப் பணிக்குழுவாகவோ நீங்கள் செய்யக் கூடிய சில பரிந்துரைகள்:

- தியானத்திற்காக நீங்கள் ஒன்றாகக் கூடி வர ஒரு நாளைத் தேர்வு செய்யுங்கள். இதற்காக உங்களது ஷாப்பிங், சமைத்தல், வீட்டு வேலை போன்ற அனைத்தையும் ஒதுக்கி வைக்கவும். நீங்கள் பின்வரும் இணைய தளங்களைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.
  - http://www.ignatianspirituality.com/advent
  - http://onlineministries.creighton.edu/CollaborativeMinistry/Advent/
- திருவருகைக்கால நோன்பு (ஒருசந்தி) இருக்க நீங்கள் முடிவு செய்யுங்கள். அதிகமாகப் பேசுவதைத் தவிர்த்திடுங்கள். முதலில், நமது செப நேரத்திலும், தினசரி விவிலியச் சிந்தனையிலும் நம் தந்தையாகிய இறைவனுக்குச் செவிசாய்க்க கற்றுக் கொள்ளுங்கள். பின்னர், உங்களைச் சுற்றியுள்ளக் குடும்பத்தார், சமூகத்தார், சக ஊழியர்கள், அக்கம் பக்கத்தார் அனைவரிடமும் செவிசாய்க்க முயலுங்கள். பிறரின் தேவைகளைக் கண்டறிந்து, அவர்களை செபத்திற்கு அழைத்து, அவற்றைப் பூர்த்தி செய்ய நம் தந்தையாகிய இறைவனிடம் மன்றாடி நிறைவேற்ற முயற்சி எடுங்கள்.
- நீங்கள் பிறருக்கு எவ்வாறு ஒரு கொடையாக இருக்க முடியும் என்பதைச் சிந்தியுங்கள். உங்கள் அருகிலுள்ள வறியோரைச் சென்றடையவோ, நோயுற்றோரைச் சந்திக்கவோ, தனித்திருக்கும் முதியோரையும் வெளிநாட்டுப் பணியாளர்களையும் சந்தித்துப் பேசவோ முயற்சி எடுக்கலாம். இதை நீங்கள் உங்களது அன்பியங்களோடும் ஆலயப் பணிக் குழுவோடும் இணைந்தும் செய்யலாம். மகிழ்ச்சியை நாம் பிறரோடுப் பகிரும் போது அது பெரிதும் அனுபவிக்கப்படுகிறது. பிறரைச் சென்றடைய இந்தத் திருவருகைக் காலத்தைப் பயன்படுத்துங்கள். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கவும் உங்களது சென்றடைதலில் அவருக்கு சாட்சியாக இருக்கவும் மறவாதீர்கள்.

## திருவருகைக் கால மலர்வளையத்துடன் செபித்தல்

திருவருகைக்கால மலர்வளையம் அடையாளமானது ஒளிக்கும் இருளுக்கும் இடையிலான பதற்றத்தில் உள்ளது, உலகின் ஒளியான மேசியாவின் வருகைக்காக காத்திருக்கிறது. ஒவ்வொரு வாரமும் மெழுகுவர்த்திகளை ஏற்றி வைப்பது, நமது ஆண்டவர் உலகிற்கு வந்த முதல் வருகை மற்றும் உயிருள்ளவர்களையும் இறந்தவர்களையும் நியாயந்தீர்க்க அவரது இரண்டாவது வருகையின் எதிர்பார்ப்பு மற்றும் எதிர்பார்ப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது. ஒவ்வொரு வாரமும் மெழுகுவர்த்தி ஏற்றப்படுவதால், இயேசு கிறிஸ்து உலகத்தின் ஒளி மற்றும் இருளை வென்றார் என்பதை நினைவுபடுத்தும்போது வெளிச்சம் அதிகரிக்கிறது மற்றும் இருள் குறைகிறது.

*(Adapted from Catholic Household Blessings and Prayer – NCCB, 1988)*

## திருவருகைக்காலத்தின் முதல் வாரம்

*முதலில் திருச்சிலுவை அடையாளமிடவும்.*

முத : ஆண்டவரின் பெயராலே நமக்கு உதவி உண்டு.

எல் : ஏனெனில், விண்ணையும் மண்ணையும் படைத்தவர் அவரே.

### இறைவார்த்தை:

### இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்- 9 : 2 – 2

காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது. ஆண்டவரே! அந்த இனத்தாரைப் பல்கிப் பெருகச் செய்தீர். அவர்கள் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்தினீர். அறுவடை நாளில் மகிழ்ச்சியுறுவது போல் உம் திருமுன் அவர்கள் அகமகிழ்கிறார்கள். கொள்ளைப் பொருளைப் பங்கிடும் போது அக்களிப்பது போல் களிகூர்கிறார்கள்.

முத : ஆண்டவரின் அருள்வாக்கு.

எல் : இறைவனுக்கு நன்றி.

*சிறிது நேர மௌனத்திற்குப் பின், அனைவரும் பரிந்துரை செபங்களையும் கர்த்தர் கற்பித்த செபத்தையும் சொல்ல வேண்டும். அதன் பின்:*

முத : இந்தத் திருவருகைக்கால மலர்வளையத்தை ஆசீர்வதிக்கும்படி இப்போது நாம் நம் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

*அனைவரும் தங்கள் உள்ளங்கைகளை திருவருகைக்கால மலர்வளையத்தின் மேல் வைக்க, முதல்வர் கீழுள்ளவாறு செபிக்க அழைக்கிறார்:*

முத : எங்கள் ஆண்டவராகிய இறைவனே, உம் திருமகனாகிய இயேசு கிறிஸ்துவுக்காக நாங்கள் உம்மைப் போற்றுகிறோம். எங்கள் இம்மானுவேல் அவரே, மக்களின் எதிர்நோக்கு அவரே, எங்களைக் கற்பித்து வழிநடத்தும் ஞானம் அவரே, ஒவ்வொரு நாட்டின் மீட்பரும் அவரே. ஆண்டவரே, இந்தத் திருவருகைக்கால மலர்வளையத்தின் மெழுகுவர்த்திகளை நாங்கள் ஏற்றும் போது உமது ஆசீரை எங்கள் மீது பொழிந்தருளும். இந்த மலர்வளையமும் அதன் ஒளியும் எங்களுக்கு மீட்பைக் கொண்டுவரும் கிறிஸ்துவின் வாக்குறுதியின் அடையாளமாக இருக்கட்டும். ஆண்டவரே, தாமதியாதேயும், சீக்கிரம் வாரும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் பெயரால் உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

*முதல் ஊதா நிற மெழுகுவர்த்தி பின்னர் ஏற்றப்படுகிறது.*

முத : நாம் அனைவரும் இறைவனைப் போற்றுவோம்.

எல் : இறைவனுக்கு நன்றி.

*கீழுள்ளப் பாடலைப் பாடி நிறைவு செய்யவும்.*

மாரனாதா மாரனாதா எம் ஆண்டவரே வருக
மண்ணகத்தோரை மீட்க மனுவேலா வருக
அகவிருளை அகற்றும் எழில் ஒளியே வருக
இனிய விடிவெள்ளியே எழுந்தருளி வருக

புனித ஈசாயின் வேல் பூத்த தாவீதின் மைந்தா
புதுமை நிறை வாழ்வினைப் பொழிந்தருள வருக (மாரனாதா)

ஏக குரல் எழுப்பி இயங்கும் திருச்சபையின்
அகில மனுமக்களின் அழைப்பினை உவந்தேற்க (மாரனாதா)

## திருவருகைக்காலத்தின் இரண்டாம் வாரம்

*முதலாம், இரண்டாம் ஊதா நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும். அதன் பின் முதல்வர்:*

முத : ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. இருளிலும் ஒளியிலும் இருக்கும் நீங்கள் பேறுபெற்றோர். ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.

எல் : ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

முத : ஆண்டவராகிய இயேசுவே வாரும்!

எல் : தாமதியாதேயும். சீக்கிரம் வாரும்!

முத : நாம் இவ்வுலகில் நிதானத்தோடும், நீதியோடும், இறைப்பற்றோடும் வாழ்வோமாக. ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.

எல் : ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

## திருவருகைக்காலத்தின் மூன்றாம் வாரம்

*முதலாம், இரண்டாம் ஊதா நிற மெழுகுவர்த்தியையும், இளஞ்சிவப்பு நிற மெழுகு வர்த்தியையும் ஏற்றவும். அதன் பின் முதல்வர்:*

முத : ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. இருளிலும் ஒளியிலும் இருக்கும் நீங்கள் பேறுபெற்றோர். ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.

எல் : ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

முத : ஆண்டவராகிய இயேசுவே வாரும்!
எல் : தாமதியாதேயும். சீக்கிரம் வாரும்!

முத : நாம் இவ்வுலகில் நிதானத்தோடும், நீதியோடும், இறைப்பற்றோடும் வாழ்வோமாக. ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.
எல் : ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

## திருவருகைக்காலத்தின் நான்காம் வாரம்

*முதலாம், இரண்டாம், மூன்றாம் ஊதா நிற மெழுகுவர்த்தியையும், இளஞ்சிவப்பு நிற மெழுகு வர்த்தியையும் ஏற்றவும். அதன் பின் முதல்வர்:*

முத : ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. இருளிலும் ஒளியிலும் இருக்கும் நீங்கள் பேறுபெற்றோர். ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.
எல் : ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

முத : ஆண்டவராகிய இயேசுவே வாரும்!
எல் : தாமதியாதேயும். சீக்கிரம் வாரும்!

முத : நாம் இவ்வுலகில் நிதானத்தோடும், நீதியோடும், இறைப்பற்றோடும் வாழ்வோமாக. ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.
எல் : ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

## கிறிஸ்து பிறப்பு விழா

முத : கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு நாம் கூடியுள்ளோம். (அல்லது: இன்று, நாம் இயேசுவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.) அவருடைய வருகைக்காக நாம் நீண்டக் காலம் தயாராகி வருகிறோம். அவருடைய வருகையை முன்னறிவித்த இறைவாக்கினர்களின் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்போம்.

வாசகர் 1 இருளில் நடந்த மக்கள் பெரிய ஒளியைக் கண்டார்கள் இருள் சூழ்ந்த தேசத்தில் வாழ்ந்தவர்கள் ~ அவர்கள் மீது ஒளி பிரகாசித்தது.

வாசகர் 2 நமக்காக ஒரு குழந்தை பிறந்திருக்கிறது, நமக்கு ஒரு மகன் கொடுக்கப்பட்டான் அதிகாரம் அவரது தோள்களில் தங்கியுள்ளது மேலும் அவர் அற்புதமான ஆலோசகர், வல்லமையுள்ள கடவுள், நித்திய பிதா, அமைதியின் இளவரசர் என்று பெயரிடப்பட்டார்.

வாசகர் 3 ஆனால் யூதா தேசத்திலுள்ள பெத்லகேமே, நீங்கள் யூதாவின் ஆட்சியாளர்களில் எந்த வகையிலும் சிறியவர் அல்ல் ஏனென்றால், என் மக்களாகிய இஸ்ரவேலின் மேய்ப்பனாக இருக்கும் ஒரு ஆட்சியாளர் உன்னிடமிருந்து வருவார்.

முத : இந்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேறியதைஇன்று நாம் கொண்டாடுகிறோம். 'இன்று தாவீதின் நகரத்தில் உங்களுக்கா மீட்பர் பிறந்துள்ளார். அவர் ஆண்டவராகிய மெசியா' என்று விவிலியம் கூறுகிறது. எனவே, திருவருகைக்கால மலர்வளையத்தின் அனைத்து மெழுகுவர்த்திகளையும் நாம் ஏற்றி வைப்போம்.

முதலில், நாம் நம்பிக்கையின் மெழுகுவர்த்தியை ஏற்றுவோம். ஏனெனில், இயேசுவே நம் நம்பிக்கை. (*முதலாவது ஊதா நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்*)

இரண்டாவதாக, நாம் அமைதியின் மெழுகுவர்த்தியை ஏற்றுவோம். ஏனெனில், இயேசுவே நம் நம்பிக்கையும் அமைதியுமாவார். (*இரண்டாவது ஊதா நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்*)

மூன்றாவதாக, நாம் மகிழ்ச்சியின் மெழுகுவர்த்தியை ஏற்றுவோம். ஏனெனில், இயேசுவே நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறார். (*இளஞ்சிவப்பு நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்*)

நான்காவதாக, இயேசு நமக்கு அன்புமயமானவராக இருப்பதால் அன்பைப் பிரதிபலிக்கும் மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்போம். (*மூன்றாவது ஊதா நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்*)

இறுதியாக, நாங்கள் நடுவிலுள்ள மெழுகுவர்த்தியை ஏற்றுவோம். இது கிறிஸ்துவைக் குறிக்கும் மெழுகுவர்த்தி. இயேசு நமக்காகப் பிறந்தார் என்பதைக் கொண்டாட இதை ஏற்றுவோம். அவர் என்றென்றும் நம் வாழ்வில் நம் மத்தியில் நம்மோடு இருக்கிறார். (*வெள்ளை நிற மெழுகுவர்த்தியை ஏற்றவும்*)

முத : அன்புத் தந்தையே, உமது திருமகனாகிய இயேசு கிறிஸ்து என்னும் உன்னதமானக் கொடைக்காக உமக்கு நன்றி. அன்பானவரே, அனைவருக்கும் தந்தையே, பூமியை மூடிய இருள் உமது வார்த்தையின் பிரகாசமான விடியலுக்கு வழிவகுத்தது. எங்களை இந்த ஒளியின் மக்களாக மாற்றியருளும். காத்திருக்கும் இவ்வுலககிற்கு உமது வாழ்வைக் கொண்டு செல்ல உமது வார்த்தைக்கு எங்களை உண்மை உள்ளவர்களாக மாற்றியருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

## திருவருகைக்கால 'ஓ முன்மொழிப் பாடல்கள்':

பாரம்பரியமாக கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு முன் உள்ள எட்டு நாட்களின் இரவுச் செபத்தின் போது (Vespers) பாடப்படும் சிறு பாடல்களை 'ஓ முன்மொழிப் பாடல்கள்' எனக் கூறுவர். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளபடி வரவிருக்கும் மெசியாவின் பண்புகளைப் பாடலாகப் பாடி, வரவிருக்கும் கிறிஸ்து பழைய ஏற்பாட்டு மக்களுக்கு மட்டுமல்ல இக்கால மக்களுக்கும் விடுதலை கொடுக்க வல்லவர் என்பதை எடுத்துரைக்கும் அற்புதமான இறையியல் இதில் அடங்கியுள்ளது. எசாயாவின் இறைவாக்கின்படி இயேசுவைத் தனிப்பட்டப் பண்புடன் அழைக்கும் 'ஓ' எனத் தொடங்கும் இப்பாடல்கள் அனைத்தும் மாலைப் பொழுதில் பாடப்படும்.

- டிசம்பர் 17: ஓ சாபியென்சியா (ஓ ஞானமே) எசாயா 11:2-3
- டிசம்பர் 18: ஓ அடோனாய் (ஓ ஆண்டவரே) எசாயா 11:4-5
- டிசம்பர் 19: ஓ ரேடிக்ஸ் ஜெஸ்சே (ஓ ஈசாயின் அடிமரத் தளிரே) எசாயா 11:1
- டிசம்பர் 20: ஓ கிளாவிஸ் டேவிட் (ஓ தாவீதின் திறவுகோலே) எசாயா 22:22
- டிசம்பர் 21: ஓ ஓரியென்ஸ் (ஓ விடிவெள்ளியே) எசாயா 9:2
- டிசம்பர் 22: ஓ ரெக்ஸ் ஜென்டியம் (ஓ அனைத்துலக அரசரே) எசாயா 9:7
- டிசம்பர் 23: ஓ இம்மானுவேல் (ஓ நம்மோடு கடவுளே) எசாயா 7:14

*மாலையின் அந்திப்பொழுதில் 'ஓ முன்மொழிப் பாடல்கள்' வழக்கமான முறையில் ஆன்மீக அலுவல்களுடன் பாடி, பின்னர் 'என் ஆன்மா ஆண்டவரை' என்ற செபத்தைச் சொல்லி அதே 'ஓ முன்மொழிப் பாடல்கள்' மீண்டும் பாட வேண்டும்.*

## டிசம்பர் 17:

ஓ ஞானமே! உன்னதமான இறைவனின் படைப்புகள் அனைத்தையும் உமது ஆற்றலாலும் அன்பாலும் வழிநடத்துபவரே! ஞானத்தின் பாதையை எங்களுக்குக் கற்பிக்க வாரும்.

## டிசம்பர் 18:

ஓ இஸ்ரயேல் வீட்டாரின் தலைவரே! சீனாய் மலை மீது மோசேவுக்குக் கட்டளைகளைக் கொடுத்தவரே! உமது வல்லமையினால் எங்களை விடுவிக்க வாரும்.

## டிசம்பர் 19:

ஓ ஈசாயின் அடிமரத் தளிரே! உமது மக்கள் அனைவருக்கும் கடவுளின் அன்பின் அடையாளமாகத் திகழ்பவரே! எவ்விதத் தாமதமுமின்றி எங்களைக் காப்பாற்ற வாரும்.

## டிசம்பர் 20:

ஓ தாவீது அரசரின் திறவுகோலே! இறை அரசின் வாயில்களைத் திறப்பவரே! இருளின் ஆதிக்கத்தில் உள்ளோரை விடுவிக்க வாரும்.

## டிசம்பர் 21:

ஓ விடி வெள்ளியே! நிலையில்லாப் பேரின்ப ஒளியே! நீதியின் கதிரவனே! இருளில் வாழ்வோர் மீதும், இறப்பின் நிழலில் உள்ளோர் மீதும் பிரகாசிக்க வாரும்.

## டிசம்பர் 22:

ஓ அனைத்துலக அரசரே! திரு அவையின் மூலைக்கல்லே! நீர் மண்ணிலிருந்து உருவாக்கிய மனிதனை மீட்க வாரும்.

## டிசம்பர் 23:

ஓ இம்மானுவேலனே! எங்கள் அரசரே! கட்டளைகளைக் கொடுத்தவரே! எங்கள் ஆண்டவராகிய இறைவனே! எங்களை மீட்க வாரும்.

# நன்றியறிவிப்புகள்


## ஆசிரியர் குழு:

ஆக்னெஸ் ஙௌ

கஸில்டா லிம்

கிறிஸ்டோஃபர் கூ

கிறிஸ்டோஃபர் தோ

டேஃப்னி லியோங்

எர்வின் சுசான்தோ

ஜாக்குலின் ஃப்ளெட்சர்

லியோனார்ட் கோ

ஷீலா ஃபோங்

அருட்தந்தை டெரிக் யப்

அருட்தந்தை டெரென்ஸ் பெரெய்ரா

## மொழிபெயர்ப்பு:

சீன மொழி பேசுவோருக்கான உயர்மறைமாவட்ட ஆணையம் (ACAMS)

தமிழ் மொழி பேசுவோருக்கான உயர்மறைமாவட்ட ஆணையம் (ACTS)

## வடிவமைப்பு:

ஜெர்ரி ஜி டான்

OFFICE FOR THE NEW EVANGELISATION

# நாங்கள் எதை இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம்?

இந்தக் கையேட்டைப் பயன்படுத்தியமைக்கு நன்றி!
நீங்களும் உங்கள் சமூகமும் இறை நம்பிக்கையில் வளர
இச்சிந்தனைகள் உதவியிருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.
இந்தக் கையேடு உங்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ததா?
எதிர்காலக் கையேடுகளில் வேறு என்னென்ன எதிர்பார்கிறீர்கள்? உங்கள்
கருத்து எங்களுக்கு முக்கியமானது. அதை எங்களுக்குத் தெரிவியுங்கள்!

Scan me

one.org.sg/feedback

ONE

OFFICE FOR THE NEW EVANGELISATION


2 Highland Road #02-19 S(549102)

6911 0420

one.org.sg

enquiries.one@catholic.org.sg

@officeforthenewevangelisation

Office for the New Evangelisation

@evangelise.sg